உ
சிவமயம்

# அருள் ஒளி



வரலாற்றுப் பெருமைமிக்க
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்
இராஜகோபுர முகப்புத் தோற்றம்

மாவைக் கந்தா சரணம் சரணம்

ஆடி
மாத இதழ்

மலர்
36

வெளியீடு
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அளவெட்டி குருக்கள் கிணற்றடிப்
பிள்ளையார் முகப்புத்தோற்றம்



அளவெட்டி
குருக்கள் கிணற்றடிப்
பிள்ளையார்
கும்பாபிஷேக தினம்
29-01-2001
மூலமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2005 பார்த்திப வருடம் ஆடி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் **36**

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2005


## நூற்றாண்டு விழாக்காணும் சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தை வாழ்த்துவோம்

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம் தனது பவளவிழாவை எங்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதான முன்றிலிலே கடந்த 1981ஆம் ஆண்டு நடாத்தியது. இச்சைவ சித்தாந்த மகாநாடு 1981ஆம் ஆண்டு மே மாதம் 8, 9, 10, ஆகிய திகதிகளில் சைவமகாநாடு, மங்கையர் மகாநாடு, இளைஞர் மகாநாடுகளாக வெகு விமரிசையாக நடந்தது. சைவமணம் கமழும் மகா நாட்டிலே தமிழகத்துப் பேரறிஞர்களும், ஈழத்துப் பேரறிஞர்களும் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். 30 – 05 – 82இல் இருந்து மகா சமாஜத்தவர்க்கு "சைவசித்தாந்தப் பெருமன்றம்" எனப் பெயர் வழங்கலாயிற்று.

இப் பெருமன்றத்தின் மகாநாடு 1945இல் யாழ் நகரிலும் 1961இல் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரப் பெருமான் ஆலயத்திலும் நடைபெற்றது. இந்த இருபது ஆண்டுகள் கால இடைவெளிக்குப் பின் இலங்கையிலே குறிப்பாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திலே சைவசித்தாந்த மகாநாட்டைக் கூட்டிய பெருமை எங்கள் சைவசித்தாந்த கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களையே சார்ந்தது. இம் மகாநாட்டுக்கு அம்மையார் அதிபராக இருந்திருக்காவிட்டால் இங்கு கூட்டியிருக்க முடியாது என்றார் மல்லாகம் தமிழறிஞர் ச. அம்பிகைபாகன் அவர்கள். இவர் பெருமன்றத்துடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டவர். பல மகாநாடுகளில் பங்குகொண்டு சொற்பொழிவு செய்திருக்கிறார்.

சென்ற 19ஆம் நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய தொண்டு அளவிடமுடியாதது. இந்த வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் தமிழகம் ஈழத்துக்கு பெரும் கடமைப்பாடு கொண்டதை தமிழகம் இன்றும் மறப்பதற்கில்லை.

இச்சந்தர்ப்பத்தில் திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகளை நினைவு கொள்வோம். நாவலரைத் தொடர்ந்து காசிவாசி செந்திநாதையர், மாயாவாத தும்ச கோளரி நா.கதிரவேற்பிள்ளை போன்றவர்கள் தமிழ் நாட்டில் சைவசித்தாந்தப் பயிரை வளர்த்து இருக்கிறார்கள். இவர்களைப் போன்று சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் சைவ சித்தாந்த உண்மைகளைப் பரப்பி இருக்கிறார்கள்.

சைவசித்தாந்தப் பெருமன்றம் 1905இல் திருப்பாதிரிபுலியூர் மடத்தில் ஞானியர் சுவாமிகளின் அருள் ஆசியுடனும் தவத்திரு மறைமலையடிகளின் வாழ்த்துடனும் ஆரம்பிக்கப் பெற்றது. இப்பெருமன்றத்தைப் பேணி வளர்த்தவர்களுள்ளே நல்ல சாமிப்பிள்ளை, சேர். பொன். இராமநாதன், தமிழ்த்தென்றல் திரு. வி.க., சைவப்பாதிரியார் க.சச்சிதானந்தம்பிள்ளை நாராயணசாமி நாயிடு, திருமுருக கிருபானந்தவாரியார் போன்றவர்களையெல்லாம் நாம் அறிந்திருக்கின்றோம். இன்று உள்ளோர் பலர் எங்களுடன் தொடர்பு கொள்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் முனைவர் அ. நாகலிங்கம் அவர்கள் திரு. முருகு இராமலிங்கம் அவர்கள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1906இல் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகாநாட்டில் தலைமை தாங்கிய பெருமை ஈழத்துச் சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்கே உரியது. மேலும் 1922ஆம் ஆண்டிலும் 1925ஆம் ஆண்டிலும் நடைபெற்ற மகாநாடுகளில் தலைமை தாங்கி ஈழத்துக்குப் பெருமை தேடித்தந்துள்ளார். அதே போன்று பன்னாலை சேர். அ. கனகசபைப்பிள்ளை, திரு. தி. பொன்னம்பலபிள்ளை, வட்டுக்கோட்டை க. அம்பலவாண நாவலர், கொக்குவில் குகதாசன், ச. சபாரத்தின முதலியார், கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர், விபுலானந்த அடிகள், வட்டுக்கோட்டை வே. நாகலிங்கம், சேர். கந்தையா வைத்தியநாதன் சு. நடேசபிள்ளை போன்றவர்கள் ஈழத்திலிருந்து தமிழகம் சென்று மகாநாடுகளில் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர்.

எங்கள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் சிதம்பரம், விருதுநகர், ஆரணி, வாரணாசி போன்ற இடங்களில் நடைபெற்ற மகாநாடுகளில் கலந்து சைவசித்தாந்த சொற்பொழிவாற்றி பெருமை சேர்த்துள்ளார். மன்றத்தின் "சித்தாந்தம்" மாதாந்த இதழ் 1948இல் இருந்து வெளிவந்த இதழ்களை சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தில் பேணிப் பாதுகாத்து வருகிறோம். இவ்வெளியீடுகள் சைவசித்தாந்தம் கற்கப்புகும் மாணவர்களுக்கு பெருவிருந்தாக அமைந்துள்ளது. உலகளாவிய ரீதியில் சமயப்பணிகளோடு நில்லாது சமுதாயப் பணிகளையும் ஆற்றி வருகின்ற சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத்தை வாழ்த்துவோம், பாராட்டுவோம்.

-ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆனிமகம்: மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு வெளிவருகின்றது)

# மணிவாசகரின் ஞான உள்ளம்

**கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**

அறிவாற் சிவமாக விளங்கியவர் மணிவாசகர். திருவருள் வழிநின்று அவர் அருளிய பனுவல்கள் திருவாசகமும் திருக்கோவையாருமாகும். பாவை பாடிய வாயாற் கோவையைக் கேட்க விரும்பிய தில்லையானருளால் வெளிவந்ததே கோவை. திருவாசகத்தின் தொடக்கம் 'நமச்சிவாய' என்றும் திருக்கோவையாரின் முடிவு 'ஊதிபமே' என்றும் அமைந் துள்ளது. எனவே நமச்சிவாய ஊதிபமே என்று நுண்பொருள் தொனிக்கக் கூடியதாக அடிகளின் ஞான உள்ளத்திலிருந்து வெளிவந்துள்ளது.

இறையுணர்வு தருவதில் வேறு எம்மொழிக்கும் இல்லாத தனிச் சிறப்பு தமிழ் மொழிக்குண்டு. தமிழிலே இறை யுணர்வு பற்றி ஓர் அடி பாடத் தொடங்கி விட்டாலே உடன் தெய்வீகம் நிரம்பி வழி யும். இந்த அநுபவத்தைத் திருவாசகத்தில் நிரம்பக் காணலாம். மணிவாசகப்பெருமான் ஞான நெறியில் நின்று சைவமும் தமிழுந் தழைக்கப் பாடியவர். "தண்ணார் தமிழளித்த தண்பாண்டி நாட்டானே" என்று கூறுவதாலும் "கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்று கூறுவதாலும் அவர்களின் தமிழார்வம் நமக்கும் புலனாகிறது. இவர்கள் காட்டிய நெறி ஞானநெறி, இராசயோகம், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் என்பவற்றில் மற்ற மூவரையும் விட அடிகள் சிறிது வேறு படுகிறார். மற்ற மூவர்களின் வாழ்க்கை யிலும் பக்தியும், கர்மமுமே தலைசிறந்து நிற்க, இவரின் வாழ்வில் ஞான யோகமே தலைசிறந்து நிற்கிறது. இதனைத் திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் சிறப்புறக் காணலாம். முதலமைச்சர் பதவியிலே இருந்தும் நிலைத்த பொருள் நிலையாத பொருள் என்பவற்றை உணர்ந் தவர். குதிரை வாங்கிவரச் சொல்லிக் கொடுத்தனுப்பிய பொருளினை இறைவன் திருப்பணியிலே செலவு செய்தார். மன்னன் பிறநாட்டின்மேல் போர் தொடுப்பதை அவர் விரும்பவில்லை. 1800 ஆண்டுகட்கு முன்பு, இன்று நாம் பேசுகிற பஞ்சசீலக் கொள்கை அடிகளிடம் காணப்பட்டது. அரசனளித்த பொருள் அனைவருக்கும் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்தாற் கோவிற் திருப்பணியிற் செலவு செய்தார். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக எடுத்தபடியால் இறைவன் சற்குருவாக வாய்த்தான். அடிகளும் தன்னையுணர்ந்து தலைவனை உணரும் நிலைக்கு வந்தார். உலகம் அவர் மனதில் துச்சமான நிலையிற் கணிக் கப்பட்டது. அதனாற்றான் ஏவலாளரை விட்டு அழைத்த சமயத்தில், அரசனின் அழைப்பைக்கூட அவர் மதிக்க வில்லை. திரிமலந்தீர்ந்து சிவனவனாகி மாறியவர் களின் தன்மை இதுவே. அன்பு நிலையில் எழுந்தது திருவாசக மென்றால் ஆனந்த நிலையில் எழுந்தது திருக்கோவையாரா கும்.

ஆன்மாக்களின் இயல்பான தன்மை மேல்நோக்கிச் செல்ல வேண்டு மென்று விரும்புதலேயாகும். பலர் மருள் வழியாக கீழ்நோக்கிச் செல்வர். சிலர் அருள் வழியாக மேல்நோக்கிச் செல்வர். இந்த இரண்டாவது வழியை நான்கு படிகளில் அமைக்கலாம். தன்னுணர்வு, முயற்சி, காட்சி, அதீதநிலை என்பன அப்படிகளாகும். இந்த முதற்படியில் நின்று நோக்கினால்

**"வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்**
**வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்**
**....................................**

**அரபரத் தொருவன் அவனியில் வந்து**
**குருபர னாகி அருளிய பெருமையை"**

என்றும்,

**"இமைப்பொழுது மென்னெஞ்சில்**
**நீங்காதான்"**

என்றும் தன் உணர்வை வெளிப் படுத்தியுள்ளார். தன்னுணர்வு ஏற்பட்ட பொழுது அவ்வுணர்வைக் கொண்டு உயிர் நன்முயற்சியில் ஈடுபடுகிறது! எங்குற்றான் எவ்விடத்தானென்று ஆராய்கிறது! ஆராய்ச் சிக்கு அகப்படாதபொழுது அழுகிறது; சுற்றிச் சுற்றி அவர் திருவடிகளையே தேடுகிறது; தேடிக் காணாதவிடத்தில் தனது குறையை உணருகிறது; தனது நெஞ்சையே நொந்து "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு ஆழ்கின்றாய்" என்று திட்டுகிறது; இன்னும், "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை, என்புருகிப், பாடுகின்றிலை, பதைப்பதும் செய்கிலை; பணிகிலை; பாதமலர் சூடுகின்றிலை; சூட்டுகின்றது மிலை; துணையிலி பிணநெஞ்சே" எனத் தன்னையே நொந்து இறைவனைத் தேடும் முயற்சியில் உள்ளத்தைச் செலுத்தி நிற்றலே இரண்டாவது படியாகும்.

காட்சி என்ற மூன்றாவது படியை எடுத்துக் கொண்டால் அந்த நிலையிலேயே உள்ளம் ஓரளவு அமைதியை அடை வதைக் காணலாம். "உனக்கிலாததோர் வித்து மேல்விளையாமல் என்வினை யொத்த பின், கணக்கிலாத் திருக்கோலம் வந்து நீ காட்டினாய் கழுக்குன்றிலே" என்னுந் திருக்கழுக்குன்றப் பதிகத்தில் அடிகள் அடைந்த அமைதியைக் காண லாம். பிரிவாற்றாமைத் துயர் அலைத்த தனால் பல தலங்களுக்கும் செல்லாது திருப்பெருந்துறையிலிருந்து திருவுத்தர கோச மங்கை, திருவாவடுதுறை முதலிய தலங்களுக்குச் சென்று திருக்கழுக் குன்றத்தை அடைந்து நின்ற நேரத்தில் அங்கே அடிகளுக்கு மேலும் பிரயாணம் அவசியமில்லை என்ற கருத்திலே காட்சியருளப்பட்டது. அதனால் அங்கு நின்று சிதம்பரத்தையடைந்தார். அங்கேயும் குருமூர்த்தி வடிவைக் கண்டு அக்காட்சியிற் திளைத்துச், "சிந்தைதனைத் தெளிவித்துச், சிவமாக்கி எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே" என்று பெருமிதங் கொண்டார். இந்தப் பெருமிதத்தினாலேயே நாலாவதுபடி தொடங்குகிறது. அடிகள் உலகத்திற்காகப் பாடியது திருக்கோவையார் என்று கூறலாம். நாலாவது படியில் எழுந்தது திருக்கோவையாரே. திருவாசகம் தோத்திர நூல்; திருக்கோவையார் சாத்திர நூல்; அத்துடன் பேரின்பப் பெருநூலுமாகும். "ஆரணங் காணென்பர் அந்தணர்" என்ற பாடலை நோக்கும் போது பல முகங்களும் பட்டைகளும் தீந்த ஒரு வைரக் குன்றம் எவ்வாறு கதிரொளிக்கேற்பவும் காண்போர் நிற்கும் கோணத்திற்கேற்பவும் தன்னொளியின் பகுதிகளைக் காட்டுமோ அவ்வாறே பொருள் காட்டி உணர் வூட்டுவது திருக்கோவையாராகும். இது மதுரைப் பெருமான் அருளால் மணிவாச கருள்ளத்தில் முகை கொண்டு கூத்தப் பெருமான் அருளாகிய கதிர்களால் நானூறு இதழ்களுடன் மலர்ந்தது; கற்போர்க்குப் பேரின்பமாகிய தேனைக் கொடுத்தது; இதுதான் கோவையின் முதலிலேயுள்ள திருவளர் தாமரையென்பது. அத்தொடர் ஒன்றினையே திருக்கோவையார் என்று கூறினும் அதில் மிகையொன்றுமில்லை.

**"உருவாகுந் தமிழ்ச்சங்கத்**
**தடம்பொய்கைத் தோன்றி**
**உயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான**
**ஒளியையுடைத் தாதி**
**மதுவாருங் கிளவியிதழ்**
**நானூ றாகி**
**மதுப்பொருளாய் மதிப்புலவர்**
**வண்ட லுண்ண**
**தருவாரும் புலியூரின்**
**உலகுய்யக் குனிப்போன்**
**தடங்கருணை யெனுமிரவி**
**தன்கதிரா லலரும்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிலே பக்குவ ஆன்மா தலைவனாகவும், பரம்பொருளாகிய எம்பெருமான் நாயகியாகவும், தோழி திருவருளாகவும், தோழன் ஆன்மபோதமாகவும் செவிலித்தாய் திரோதாயியாகவும் நற்றாய் பரையாகவும் அறிவன் நூற்பொருள் செல்கிறது. மற்றப் பனுவல்களிலும் பார்க்க இதிலே காணப்படும் ஒரு மாறுபாடு ஆன்மாவை நாயகனாகக் கொள்ளுவதே. ஏனெனில் தனியே ஒவ்வொரு துறைகளைச் சொல்லாமற் கோவையாக நானூறு துறைகளைச் சொல்லுவதாலும், சிவானந்தம் போலும் சிற்றம்பலம் போலுமென்னும் மேன்மையை நாயகிக்குக் கொடுப்பதாலும் எம்பெருமானை நாயகி பாவத்திலேயே அமைத்துள்ளார். அபேத இன்பமாகப் பெற்று ஆனந்தம் அநுபவிக்குங்கால் நாயகி கூற்றையும் அறிந்துய்ய வேண்டும் திருக்கோவையாரில் வரும் இருபத்தைந்து கிளவிக் கொத்துக்களுக்கும் இருபத்தைந்து பேரின்ப விளக்கமுண்டு. இயற்கைப் புணர்ச்சிதான் ஞானகுரு தரிசனம். கடைசியில் உள்ள பரத்தையிற் பிரிவுதான் உயிர் கர்வஞ்ஞத்துவம் பெற்று அளவிலாப் பேரின்பமெய்தியிருக்கும் நிலை. இப்படியாக ஒவ்வொரு பிரிவிற்கும் விளக்கம் கூறிற் பெருகும். சில நுணுக்கங்களை மாத்திரம் கவனிப்போம்.

**"வளைபயில் கீழ்கடல் நின்றிட**
**மேல்கடல் வானு கத்தின்**
**துளைவழி நேர்கழி கோத்தெனத்**
**தில்லைத்தொல் லோன் கயிலைச்**
**சிலைவயின் நீங்கிஇக் கெண்டையங்**
**கண்ணியைக் கொண்டு தந்த**
**விளைவை யல்லால் வியவேன்**
**நயவேன் தெய்வம் மிக்கனவே"**

ஏதோ ஒரு திசையாகச் சென்று கொண்டிருந்த தன்னை அகப்படுத்தி தன்னை உய்யுநெறி காட்டிக் காட்சி தந்து உய்யக் கொண்ட தன்மையை விளக்குவதற்குக் கீழ்கடலிட்ட நூலொன்று மேல்கடல் நின்ற துளைவழி சென்று நின்ற தன்மைக்கு ஒப்பிடுகிறார். இதனையே அற்புதப்பத்திலும் அருளிச் செய்திருக்கிறார். "இவனைக் கண்டு இங்கு நின்று அங்கு வந்த கவளக் களிற்று அண்ணலே இக்கடலிடத்தே" எனத் தலைவனைப் பாங்கன் வியக்கிறான். இது ஆன்மபோதம் பின்வாங்கும் நிலையைக் காட்டுகிறது.

எனவே ஞானநெறி காட்டிய மணிவாசகர் தமது அநுபவத்தை எடுத்துக் கூறிய தன்மையிலே நாம் கலந்து பாடுவோமானால் அது இராமலிங்க வள்ளலாருக்குச் சுவைத்ததுபோல் ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்குமன்றோ!

[1964ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற திருமுறை விழாவில் **திரு. அ. ச. ஞானசம்பந்தன்** அவர்களின் தலைமையில் பேசப்பெற்றது.]

## "அருள்ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

**"அருள்ஒளி" மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர்:
"அருள்ஒளி"
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்:
"அருள்ஒளி"
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டில் ஒழுங்குகளைப் பேணுவோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சைவமக்களில் பெரும்பாலோர், சைவசமய அறிவு உடையவர்களாக உள்ளனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் சைவநெறி நின்று ஒழுகுவதில் தான் சிரமப்படுகிறார்கள். ஆலயங்களில் எவ்வாறு சுவாமிதரிசனம் செய்ய வேண்டும், என்ன விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டால், சரியான பதில் சொல்பவர்கள், ஆலயங்களில் நடந்து கொள்கின்ற மாதிரிகளைப் பார்க்கும் போது விசனப்படாமல் இருக்க முடியாது.

ஆலயங்களில் இறைசிந்தனையோடு, வழிபாடு செய்யவேண்டும்; அமைதி பேண வேண்டும்; வீண் வார்த்தைகள் பேசுதல் ஆகாது போன்ற நடைமுறைகள் யாருக்குத்தான் தெரியாது. ஆனால் இவ்வளவும் ஆலயங்களில் மீறப்படுகின்றன என்பதும் எல்லோருக்கும் தெரியும். தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகா பாவம் ஆகும். அத்தகைய பாவங்களுக்கு விமோசனம் கிடையாது. ஆலயங்களில் ஒழுங்கு விதிகளை மீறி நடந்து கொள்ளுதல் என்பது குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொண்டமைக்கு ஒப்பாகும்.

கோபுர வாயிலினூடாகவே கோயிலுக்குள் செல்ல வேண்டும். அவ்விடத்தில் மூன்று நாலுபேர் குழுமி நின்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டும், குசலம் விசாரித்துக் கொண்டும் நின்றால், கோபுர வாயிலினூடாக உட்செல்பவர்களையும் வெளிச் செல்பவர்களையும் தடை செய்கின்ற முயற்சியாக அமைகின்றது என்பதைப் பலர் சிந்திப்பதில்லை. நாம் பிறருக்கு இடையூறாக நடந்து கொள்ளக்கூடாது என்பதைத் தெரிந்து கொண்டும், ஆலய வாயிலிலும், சுற்றுப்பிரகாரங்களிலும் இவ்வாறு பிறருக்கு இடையூறு செய்வதும், தொல்லைகள் தருவதும் எவ்வாறு நியாயமாகும்.

இறைவன் சந்நிதியில் பயபக்தியோடு வழிபாடு செய்யவேண்டியது அவசியம். ஒருவர் பக்தியோடு இறைவனை வழிபாடு செய்யும் போது, பக்கத்தில் நிற்பவர்கள் கதைத்துக் கொண்டும், அங்கங்களை அசைத்துக் கொண்டும், வேறு பல்வேறு விதங்களில் அவருடன் முட்டி மோதிக் கொண்டும் நின்றால், சுவாமி தரிசனம் செய்பவர் இத்தொல்லைகளுக்கு மத்தியில் எவ்வாறு தன் மனத்தை இறைவனோடு லயிக்கச் செய்து, வழிபாடு செய்யமுடியும். எத்தனையோ நல்ல உள்ளங்கள் அமைதி தேடி ஆண்டவன் சந்நிதிக்கு வந்து அங்கும் அமைதி காணமுடியாமல், தவிப்பதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்பது கூட, பல கோயில்களில் காண முடிவதில்லை. அங்கும் பணம், பதவி, அந்தஸ்து, செல்வாக்கு, என்பவற்றிற்குத் தான் முதலிடம். பூசை நேரங்கள் கூட இத்தகையோரின் வசதிக்கேற்ப மாற்றியமைக்கப்படுகின்றன. இவர்களின் வருகைக்காக, இறைவன் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகி வருவதைக் காணும், உண்மை அடியார்கள் மிகுந்த வேதனை அடைகிறார்கள். ஆகமங்களைக் கற்றுத் தேர்ந்த சிவாச்சாரியப் பெருமக்கள், சரியான வழிகாட்டலை வழங்காமலிருப்பதும் வேதனையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

சில கோயில்களில் உட்பிரகாரங்களில் ஒலிபெருக்கிகளை அமைத்து, அடிக்கடி அறிவித்தல்களை ஒலிபரப்புகின்றனர். இத்துணை சத்தத்தின் மத்தியில் மனத்தை ஒருமுகப்படுத்தி, இறைவனோடு ஒன்றித்து வழிபாடு செய்வது எப்படிச் சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதோ நல்ல நாட்பெருநாள், வெள்ளிக்கிழமை என்று, இத்தினங்களில் கோயிலுக்குப் போகவேண்டும் என்பது நியதி. சமயக் கடமையுங் கூட. அதனால் போகிறோம் அத்தோடு திருப்தியடைய வேண்டியதுதான். மற்றும்படி மன ஒருமைப்பாட்டுடன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்யவோ பக்தி சிரத்தையோடு இறைவனைக் கும்பிடவோ மனநிறைவோடு அர்ச்சனைகளைச் செய்யவோ அங்கு நிலவுகின்ற சூழ்நிலை ஏற்றதாக இல்லை" இவ்வாறு பலர் கூறுகிறார்கள். இது சிந்தனைக்குரிய விடயம்.

இன்று வீட்டில் அமைதியில்லை; வேலைத்தலத்திலோ, வாழும் சமூகத்திலோ அமைதியில்லை; நாட்டிலும் அமைதியில்லை இறைவனின் கோயிலிலாவது அமைதியைக் காணலாம் என்று அங்கு போனால், அங்கும் சாந்திபெற முடியவில்லையென்றால், மக்கள் வேறு எங்குதான் போவது? அமைதி, நிம்மதி, சாந்தி இவைதான் இன்று நமக்கு அத்தியாவசியம் தேவைப்படுகின்ற பண்டங்கள். இவற்றைத் திருக்கோயில்களில் தான் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும். அமைதி பேணுதல், ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தல், பிறருக்கு இடையூறுகளை விளைவியாதிருத்தல், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்தல் என்பன மூலமும், திருவருளின் துணையுடனும் திருக்கோயில்களில் அமைதி, சாந்தி, தூய்மை, சமரசம், நிலவ வழிசெய்வோமாக.

◆◆◆

## அருள்கோடி தரும்மாவைப் பதிவாசனே

ஆடியில் அழகு பண்பாடும்
அருள்திரு முருகனின் கொடியேறும்
நாடிட நல்லருள் கைகூடும் நமை
வாட்டிடும் வேதனை மறைந்தோடும்

ஆடிடும் நடனம் எமையீர்க்கும் அந்த
அற்புதம் மெய்யினில் ஒளிசேர்க்கும்
பாடிடும் திருப்புகழ்ப் பாமணக்கும் ஐயன்
பன்னிரு விழிகளும் அருள்சுரக்கும்

மஞ்சமதில் இசை கூட்டிவந்தே இரு
வஞ்சிய ரோடுமே காட்சிதரும்
குஞ்சரி நாயகன் குமரனுமே தினம்
அருளொளி நல்கிட அமைதிவரும்

செந்தினை தேனின் சுவைநாடி தினம்
சிந்தையில் வள்ளியின் நினைவாகி
சுந்தரன் முருகன் வனமாடும் சுவை
துதித்திடில் வினைகளும் பறந்தோடும்

இருளினைக் கிழித்தொளி மிகுகூட்டி வரும்
இடர்கெட வழிதரும் சப்பரமும்
பெருமையில் மின்னொளி இசைபாடும் அந்தத்
திருவருள் என்றோ கைகூடும்

கொஞ்சிடும் மணியின் இசைநாதம் எங்கும்
கோலமிட வரும் திருத்தேர்கள்
வெஞ்சின அவுணர் குலம்வீழ்த்தும் அந்த
விந்தைகொள் நிலையென்று இனிமேவும்?

எருதுகள் இரண்டும் செய்தவமே எந்தை
முருகனும் வள்ளிதெய் வானையொடும்
வருவினை நீக்கிடக் கண்டகியில் இவர்
வந்துநீ ராடலும் அற்புதமே

இந்நிலை என்றோ கைகூடும் எம்
இறைவா முருகா விடைகூறும்
சுந்தர மாமயில் வாகனனே உன்னைத்
துதித்தேன் வந்தோர் வழிகாட்டும்

கவியாக்கம்: **சு. குகதேவன்,** தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை-அளவெட்டி-கணேஸ்வரம்
# குருக்கள் கிணற்றடி ஆலய வரலாறு

திரு. கனகசபை ஞானேஸ்வரன் அவர்கள்
அளவெட்டி

"சிவபூமி" எனத் திருமூலரால் போற்றப்படும் ஈழநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தில் அளவெட்டிக் கிராமத்தில் பல விநாயகர் ஆலயங்கள் அமைந்துள்ளன. அளவெட்டிக் கிராமத்தை அலங்கரிக்கின்ற கும்பிளாவளைப் பிள்ளையார் கோயில், பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில், அழகொல்லைப் பிள்ளையார் கோயில், குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் என்பன பிரசித்தி பெற்றவை. இவ்வாலயங்கள் தனியான வரலாற்றுத் தொடர்புகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன.

குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் கோயில்அளவெட்டி தெல்லிப்பழை மல்லாகம் ஆகிய மூன்று கிராமங்களும் இணையும் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பிள்ளையார் ஆலய வரலாறு மிகவும் தொன்மையானது. இற்றைக்கு600 ஆண்டுகளுக்கு முன் துறவறத்தை ஏற்ற அரசகுலத்தைச் சார்ந்த சம்பந்த ஞானியார் வாழ்ந்தர்கள். இவர் பல அற்புதங்களைச் செய்து சித்திகளைப் பெற்று சமாதியடைந்தார் என்று வழிவந்த ஐதீகக் கதைகளை இன்றும் கேட்டு அறியமுடியும்.

கலைப்புலவர் சி.எஸ். நவரத்தினம் எழுதிய "இலங்கைத் தமிழர்கள் வரலாறு" என்ற நூலில் இந்த சம்பந்த ஞானியார் வாழ்ந்த காலத்தை அறியக் கூடியதாகவுள்ளன. அரச பரம்பரையைச் சேர்ந்த சம்பந்த ஞானியார் சமாதி இருந்த இடத்தில் வைரவர் கோயில் ஒன்று உண்டு. இங்கு அரசு, ஆல், வேம்பு ஆகிய மூன்று மரங்களும் தலவிருட்சமாகவுள்ளது. சம்பந்த ஞானியார் சமாதி கோயில் இருந்த இடத்தில் அளவெட்டி வாழ் மக்கள் கோயில் அமைத்து வழிபாடு செய்து வந்தனர். இதனால் இக்கோயில் சம்பந்த ஞானியார் கோயில் எனப் பெயர் பெற்றது.

1620ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கேயரின் ஆட்சியின் போது பாடல் பெற்ற தலங்கள் உட்பட பல சிவாலயங்கள் தரைமட்டமாயின. கோயில் அதிகாரிகள் கோயில் விக்கிரகங்களை நிலத்தில் புதைத்தும் மறைத்தும் வைத்தனர். இவ்வாறே ஞானியார் கோயில் விக்கிரகமும் புதைக்கப்பட்டுவிட்டது. இந்த அரசாட்சிகள் ஒழிய மீண்டும் சைவ மக்கள் கோயில்களைப் புதுப்பிக்க முற்பட்டனர். இக்காலத்தில் அளவெட்டியைச் சார்ந்த சைவக்குருக்கள் தனது வீட்டுக்கு கிணறு வெட்டிய போது இவ்விநாயகப் பெருமானுடைய சிலை கண்டெடுக்கப்பட்டதாக வரலாறு உண்டு. அருமையும், பெருமையும், அழகும் மிகுந்த விநாயக விக்கிரகத்தை கிணற்றடி அருகே கோயில் அமைத்துவழிபாடு ஆற்றி வந்தனர். மக்கள் வழிபாடு செய்ய ஆரம்பித்த காலம் முதல் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் எனப் பெயர் பெறலாயிற்று. 1895இல் யாழ் கச்சேரி செயலத்தால் தயாரித்த கோயில் பட்டியலில் இவ் ஆலயப் பதிவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கோயில் கட்டடங்கள் பழுதடையத் தொடங்கியமையால் 1900ஆண்டு அளவில் கோயில் திருப்பணிகளை ஆரம்பித்து நடாத்தி வந்தார் பரியாரி காசிப்பிள்ளை என்பவர். கோயிலுக்கு நிலங்களையும், பொருளையும் வாரி வழங்கினர்.கும்பாபிஷேகம் செய்வதற்கு முன் துரதிஷ்டவசமாக "காசிப்பிள்ளை" என்ற பக்தர் சிவபதம் அடைந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து "சுப்பிராயர்" என மக்களால் அழைக்கப்படும் இவரின் மைத்துனரான கந்தப்பர் சுப்பிரமணியம் திருப்பணியை ஏற்று மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தி முடித்தார். 1920ஆம் ஆண்டு தேர் கட்டி பத்துநாள் திருவிழாவாக நடைபெறும் வழக்கமாயிற்று. இதன் பின்பு அன்பர்கள் ஆதரவால் 1978ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது.

எமது நாட்டில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற யுத்த நெருக்கடிகளினால் பிள்ளையார் ஆலயமும் 1995ஆம் ஆண்டு யூலை முதல் 1997 அக்டோபர் வரை பூசைகள் எதுவுமின்றி பூட்டப்பட்டு இருந்தது. பின் பூசைகள் நடைபெற்று வந்தது. மீண்டும் 1999ஆம் ஆண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று அடியார்களின் பேருதவியால் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டது. 29-01-2001இல் சிவஸ்ரீ சோ. பிரணதார்திகரக் குருக்கள் அவர்களின் தலைமையில் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்டது. இக் கும்பாபிஷேக விழாவின் போது சமயப் பெரியார்களான நல்லை ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர், கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை, வாழ்த்துரை வழங்கினார்கள்.

மேலும் 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவைத் தொடர்ந்து உள்வீதிக் கொட்டகைத் திருப்பணிகள் பகுதி பகுதியாக நிறைவேறியுள்ளது. மேலும் பல திருப்பணிகள் நடைபெற்று வரும் இவ்வேளையில் ஆண்டு தோறும் ஆடிப்பூரணையை அந்தமாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இம் மகோற்சவ காலங்களில் பிள்ளையாரின் திருவருளால் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருவது முக்கிய அம்சமாகும். குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் கோயிலின் திருப்பணி, பரிபாலனக் கைங்கரியங்களை திரு. ச. சுப்பிரமணியம் தலைவராகவும், திரு. சி. செம்பொற்சோதி உபதலைவராகவும், திரு. க.ஸ்ரீகந்தராசா செயலாளராகவும், திரு. க. ஞானேஸ்வரன் பொருளாளராகவும் கொண்ட நிர்வாக சபையினர் செம்மையாக ஆற்றி வருவது சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத்து விநாயகர் ஆலயத் தொடரில் அளவெட்டி குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் கோயிலும் ஒன்றாக மிளிர்கின்றது.


**சிவபூமி கண்தானச் சபை**

**தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**




**தொடர்புகளுக்கு:**
**ஆறு.திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

**கண் வைத்திய நிபுணர்கள்:**
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr. சிவந்தா, 021-222 3149**
யாழ்.போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனாரின் நினைவுகள்

**திரு. மு. மயில்வாகனம் ஆசிரியர்**
(அமரர்) யாழ்ப்பாணம்.

**நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்க டன்அடி யேனையும் தாங்குதல்**
**என்க டன்பணி செய்து கிடப்பதே.**

நாட்டிலே சமய வாழ்க்கை குறைந்து வரும் காலத்தில் சைவப்பெரியார்களுடைய கருத்துக்களையும் வாழ்க்கை முறையினையும் இக்கால மக்கள் அறிந்து இருத்தல் நன்மை பயக்கும். அந்த நோக்கத்துடன் சிறியேன் அப்பெரியாருடன் நீண்ட காலத் தொடர்பினால் உண்டான சில நினைவுகளைக் குறிக்க விரும்புகிறேன்.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதல் முதல் சிறியேனுக்கு ஆங்கிலம் கற்பித்தவர் திரு.சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணவர் ஆவர். அவர் பெயர் திரு. ச. சொக்கலிங்கம்பிள்ளை அவர்கள். இவரும் தீவுப்பகுதி சோமசுந்தரம்பிள்ளை அவர்களும் சிநேகிதர்கள் ஆவர். இருவரும் பிள்ளை அவர்களின் மாணவர்கள். அவரைப் போன்றே குடுமி வைத்திருந்தவர்கள். 1910ஆம் ஆண்டு எனது பத்தாவது வயதில் நமது ஆசிரியர் சொக்கலிங்கம்பிள்ளை அவர்களுடன் வேலணையில் இருந்து அராலித்துறை மார்க்கமாகத் தோணிமூலம் சுழிபுரத்துக்குச் சென்றோம். சாயங்காலம் அப்பெரியாரைச் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். வெண்ணிற ஆடை அணிந்திருந்தார். அவர்கள் இருவரும் நன்கு உரையாடினார்கள்.

1914ஆம் ஆண்டு அளவில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இந்து சமய சம்பந்தமாக ஒரு சொற்பொழிவு ஆற்ற சேர். பொன். இராமநாதன் அவர்கள் பெல்ப்ஸ் (Phelps) என்ற பெயருடைய அமெரிக்கப் பிரபுவை அழைத்து வந்தார். இந்தப் பிரபு இந்து சமயத்தைத் தழுவியவர். அப்பிரசங்கத்தை திரு. சி. பிள்ளை அவர்களே சிறந்த முறையில் மொழிபெயர்த்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலும் ஆசிரியராய்இருந்த காலத்திலும் அவரைப் பல இடங்களில் கண்டிருப்பேன். அவருடைய பிரசங்கங்களையும் கேட்டிருப்பேன். சைவபரிபாலன சபையில் சிறியேன் காரியதரிசியாகக் கடமையாற்றிய காலத்தில் 1947ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நெடுந்தீவில் இருந்து ஒரு நிருபர் அங்கு ஒரு சைவ வித்தியாசாலையில் கல்வி பயின்ற பதினொரு பிள்ளைகள் ஞானஸ்ஞானம் பெற்று கிறீஸ்தவர்களாக மாறிவிட்டார்கள் என்ற செய்தியை இந்துசாதனம் பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். இச்செய்தி இந்துசாதனப் பத்திரிகையில் வெளிவந்தது. கந்தவனப்பதியிலே வசித்து வந்த பிள்ளை அவர்கள் குமிழி மிதியடியில் நடந்துவந்து வண்ணார்பண்ணையில் வசித்து வந்த நமது வீட்டுக்கு வந்து நமது மனைவியாரிடம் ரூபா 100 கொடுத்து என்னை நெடுந்தீவுக்குச் சென்று மேற்படி மதமாற்றம்நடந்த சம்பவத்தை விசாரணை செய்து கல்வி மந்திரிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தார். கொக்குவில் குமாரசாமிப்புலவர், ஏழாலை திரு. மு. ஞானப்பிரகாசம், நல்லூர் திரு. பொ. அப்புக்குட்டி, அராலிக் கந்தையா, திரு. அண்ணாமலை ஆகியோருடன் நெடுந்தீவுக்குச் சென்றோம். மதமாற்றம் நடந்த பிள்ளைகளை விசாரணை செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அவ்வித்தியாசாலையில் ஒரு சமயப் பிரசாரக் கூட்டமும் வைத்துவிட்டு ஓர் அறிக்கையைத் தயாரித்து கல்வி மந்திரிக்கு அனுப்பினோம். அதன் பயனாக அக்கிராமத்தில் ஒரு அரசினர் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

பிள்ளை அவர்கள் வேதசிவாகமங்களே சைவசமய முதல் நூல்கள் என்றும் சைவத் தெய்வத் திருமுறைகள் அவற்றின் வழியாக வந்தன என்றும் வடமொழி பாரதநாடு முழுவதற்கும் உரிய தெய்வமொழி என்றும் நம்பிக்கை உடையவர். வேதசிவாகமங்கள் தமிழிலே இருந்தனவென்றும் வடமொழி பிராமணருடைய மொழி என்றும் சைவ சமய முதல் நூல்கள் தமிழிலே இருந்தன என்றும் கூறி ஒரு தனித்தமிழ் இயக்கத்தை மறைமலையடிகள், திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் ஆரம்பித் தார்கள். 1925ஆம் ஆண்டு அளவில் சைவப் பெரியார்கள் திரு.J. ஜம்புலிங்கம்பிள்ளை, C.K. சுப்பிரமணியமுதலியார், அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள் ஆகியோருடைய கட்டுரையைப் பெற்று மேற்படி தனித்தமிழ்க் கொள்ளையைக் கண்டித்து "திருநான்மறை ஆராய்ச்சி" என்னும் நூல் வெளிவந்தது. வைதீக சைவக் கொள்கையுடைய பெரியார்கள் வெளியிட்டார்கள். அந்நூலுக்குத் திரு. சிவபாதசுந்தரனார் அவர்கள் பல ஆதாரங்கள் காட்டி தனித்தமிழ்க் கொள்கையைக் கண்டித்து ஒரு கட்டுரையை வழங்கினார். அக் கட்டுரையை மீண்டும் அச்சிட்டு வெளியிடுதல் நன்மை பயக்கும்.

1964ஆம் ஆண்டு அளவில் ஒரு சைவ மகாநாட்டிற்குத் தலைவராக மறைமலையடிகளுடைய மாணவன் இளஅழகனார் என்பவரைத் தலைவராக அழைப்பதற்கு எங்கள் சபையார் தீர்மானம் செய்தனர். அவரும் எங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டபின் போக்குவரத்துக்குரிய பணமும் அனுப்பப்பட்டது. அப்பொழுது சிறியோன் திரு. C. குலரத்தினம் ஆசிரியர், திரு. வ. கார்த்திகேசு ஆசிரியர் ஆகியோ ருடன் திரு. சி. பிள்ளையவர்களைச் சந்திப்பதற்குப் பருத்தித்துறை சென்று இச்செய்தி யைத் தெரிவித்தோம். அப்பொழுது அப்பெரியார் கூறியதாவது; இந்தியாவில் இருந்து அம்மைநோய் முதலியன இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இருக்கின்றன. தனித்தமிழ்க் கொள்கை இலங்கையில் புகுவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டமும் இல்லை என்று கூறிக் கவலைப்பட்டார். இளஅழகனாரை அழைக்க வேண்டாம் என்று கூறினார். பிரயாணத்திற்குரிய பணத்தை அனுப்பிவிட்டோம் என்று கூறினோம். பணம் போனாலும் பரவாயில்லை, அவரை அழைக்க வேண்டாம் என்று எங்களைக் கேட்டுக்கொண்டார். அவரின் சொல்லைக் கேட்டு நாங்களும் இளஅழகனாரை அழைப்பதை நிறுத்திவிட்டோம்.

1927ஆம் ஆண்டு அளவில் ஸ்ரீமத் யோககுருசாமிகளுடைய சீடர்களில் ஒருவர் எனக்குக் கூறியதாவது; யோகர்சாமிகள் தமது தவ வாழ்க்கையை நடாத்துவதற்கு இடை இடையே பூநகரிக்குச் செல்வதுண்டு. அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திகிரி பிள்ளையார் கோயிலில் உற்சவம் நடந்தபோது ஒரு உற்சவ தினத்தில் யோகர்சுவாமிகள் வாகனம் காவினார். அத்தொண்டினைப் பிறரும் புரியும்படியாகத் தூண்டினார். அப்பொழுது அவர் கூறியதாவது; "யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விமானும் ஞானியுமாக விளங்குகின்ற திரு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்கள் ஒரு பிரபல கல்லூரியின் பிரதம ஆசிரியர். அவர் கந்தவனக்கடவையில் ஒரு குடிசையில் வாழ்ந்துகொண்டு முருகப்பெருமானுக்குச் சரியைத்தொண்டு புரிந்து வருகின்றார். வீதிகளைப் பெருக்குவார், தீவர்த்தி பிடிப்பார். இப்படியான தொண்டுகள் செய்கிறார். நீங்களும் இப்படியான தொண்டுகள் செய்யவேண்டும்" எனக் கூறினார். இதை எனக்குச் சுவாமிகளின் சீடன் ஒருவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1947ஆம் ஆண்டு அளவில் திருக்கேதீஸ்வர ஸ்தலத்தின் நிருவாகம் கொழும்பு புதுக்கதிரேசன் செட்டியார் சங்கத்தினர் ஆதரவில் இருந்தது. அக்காலத்தில் அங்கு போக்குவரத்துச் செய்வது கஷ்டம். சுற்றாடல் முழுவதும் காடு. கோயில் கணக்கப்பிள்ளை மான்வேட்டையாடி மான் இறைச்சியைக் கோயில் மடத்தில் காயப்போட்டு கருவாடு ஆக்குவதைப்பற்றி ஓர் அன்பன் திரு. பிள்ளை அவர்களுக்கு முறையிட்டார். உடனே பிள்ளை அவர்கள் சிறியேனிடம் இதனைத் திருக்கேதீஸ்வரம் சென்று விசாரித்து நிறுத்தும்படியாக என்னைக் கேட்டுக்கொண்டார். அக்காலத்தில் சபையின் காரியதரிசியாக இருந்த பரிஸ்டர் சண்முகத்துடன் திருக்கேதீஸ்வரம் சென்று விசாரணை செய்து அக்குறையை நீக்கினோம்.

ஈழநாட்டில் சைவத்தினதும் திருமுறைகளினதும் பெருமையை விளக்கி மக்களைச் சைவ வாழ்க்கை வாழத் தூண்டியவர்களில் வேதாரணியம் சைவக்குருக்கள்மாரும் சேர்ந்தவர்கள் ஆவர். அளவெட்டியில் வசித்து அரிய சைவத்தொண்டு புரிந்த குருக்கள்மாருள் அடங்கன்முறை ஸ்ரீமத் செல்லையாக்குருக்களும் ஒருவராவர். இவர் அடங்கன்முறை அ. கணபதிக்குருக்களுடைய புத்திரர் ஆவர். இவர் இடத்தில் உபதேசம் பெற்று நற்பேறு அடைந்தவர்கள் பலர். ஆனைக்கோட்டை சுப்பிரமணிய தேசிகர் அவர்கள், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், அளவெட்டி பொ. கைலாசபதி அவர்கள் அவரிடத்தே உபதேசம் பெற்றவர்கள். திரு. பிள்ளை அவர்களும் இவர் இடத்தே ஆசீர்வாதம் பெற்றவர்.

14-08-53 அன்று சிறியேன் அவருடைய மருகர் திரு. ம. வே. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களுடன் அவருடைய ஈமச்சடங்கில் பங்குபெறச் சென்றிருந்தேன். அவருடைய ஈமக்கிரியைகள் அவருடைய ஞாதி அருனாசலம்பிள்ளை அவர்களின் இல்லத்தில் பருத்தித்துறையில் நடந்தது. பெருந்திரளான மக்கள் சமூகம் அளித்திருந்தனர். சுழிபுரம் தேச ஊழியன் நா. சேனாதிராசா கிரியைகள் முடிவில் சிறந்த நடையில் உணர்ச்சி ததும்ப உரை நிகழ்த்தினார்.

இப்பொழுது கொண்டாடப்படவிருக்கும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடு பவர்கள் யாவரும் திரு. சிவபாதசுந்தரனாரிடத்தில் கல்வி கற்றவர்களும் அவரோடு பழகியவர்களுமாவர். இனிமேல் வருகின்ற சந்ததியாருக்கு அவரைக் காணும் பேறு கிடையாது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் சைவப் பண்பாட்டைப் பேணுவதற்கும் அப்பெரியாருடைய ஞாபகத்தை மக்களுள்ளங்களில் என்றும் நிலைக்கச் செய்வதற்கும் நான் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

அதாவது, திரு. சிவபாதசுந்தரனார் எப்பொழுதும் மிதியடியோடு தான் தோற்றமளிப்பார். ஆறு அல்லது ஏழு அடி உயரத்தில் ஒரு மாடம் விக்ரோறியாக் கல்லூரிச் சூழலில் அமைத்து அதில் அவருடைய மிதியடியை வைத்து விளக்கேற்றி வருதல் மக்களுடைய உள்ளங்களில் அவருடைய ஞாபகத்தை நிலைபெறச் செய்யும். விக்ரோறியாக் கல்லூரி ஒரு சைவ நிலையமாக என்றும் விளங்கும்.

நன்றி: **சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் குருபூசையை முன்னிட்டு நூற்றாண்டுவிழா மலரில் இருந்து எடுக்கப்பட்டது.**

**உங்கள் அபிமான "அருள்ஒளி" கிடைக்கும் இடங்கள்**

**அலுவலகம்:**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையிலும்பொறுமை பூண்ட வனிதையார்

**சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

ஒரு நாள் இரவில் இளையான்குடி என்னும் பதியில் வான்முகில் வழாது மழைநீரை வாரி இறைத்தது. அந்த வேளையில் மாறனார் மனைவியாரைப் பார்த்து;

"இந்தத் தபோதனர் மிகவும் பசியுடையவராக இருக்கின்றார். நாம் என்ன செய்வோம்?" என்று மனைவியாரோடு ஆலோசித்தார். மனைவியார் மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாகச் சிந்தித்த வண்ணம் இருந்தார். சற்று நேரங்கழிந்த பின்னர் மாறனார் மீண்டும் மனைவியாரைத் தூண்டினார்.

"முன்னமே நமக்கு இங்கு உணவு இல்லை. ஆயினும் வந்திருப்பவர் மலைமகள் மணாளருக்கு அன்பர். அவருக்கு நாம் இனிய உணவு அடியார் பூசைக்குப் பொருந்த அமைத்தல் வேண்டும். தெய்வப் பெண்ணே! அது ஆக்கும் வழியாது?" என்று எடுத்து இயம்பினார். மாறனார் மனைவியாருடைய நல்ல பதிலை எதிர்பார்த்து நின்றார்.

மாறனார் உழவு தொழிலால் உயர்ந்தவர். தொழில் வளத்தினால் வரும் பெரும் உணவுச் செல்வத்தில் நிகரற்றவர். சிவனடியாரிடத்தில் அன்பகலாத அகத்தினர். உழவு தொழில் சார்ந்த ஏனைய செல்வ வளங்களும் பல்கப் பெற்றவர்.

மாறனார் செல்வமும் சிவசிந்தையும் சிறப்புற்றவராதலின் அரன் பூசை அடியார் பூசையைப் பெரிதும் ஆதரித்தார். சைவ சிந்தாந்தக் கோட்பாடாகிய, மகேசுர பூசை, மாகேசுர பூசையின் மகத்துவத்தைப் பெரியபுராணமும்,

**"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்**
**அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்**
**கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்**
**உண்மை யாம்"**

என்று தெளிவுபடுத்துகின்றது.

மாறனார் எல்லாச் செல்வப் பொலிவில் சிறந்தலினால் குபேர சம்பத்துக்குரிய கொள்கையரானார். அன்றைய நாளில் மாறனார் நிலை அது. இன்றைய நாளில் மாறர் மனைவியார் பசியை மாற்றக் காற்றைப் புசிக்கும் நிலை இது. எல்லாம் தில்லைநாதர் செய்யும் திருவிளையாடல். மாறர் செல்வச் செழிப்பு நாளில் அடியார் பூசை புரிவதன்றியும் வறுமையிலும் செம்மையாக அடியார்க்கு அமுதூட்ட வல்லர் என்ற உண்மையை உலகவர்க்கு உணர்த்த ஒல்லையில் வறுமைப்பதம் புக உன்னினார் தில்லை மன்னினார்.

மாறர் வறுமையிலும் கொடிய வறுமைக்குத் தள்ளப்பட்டார். இயற்கையாகவே வறுமையோடு நல்லுறவு நயந்தவர்களுக்கு வறுமையின் வலிவு அவ்வளவு நலிவு மெலிவு தாக்காது.

குபேர சம்பத்தத்தோடு தோழமை பூண்டிருந்த மாறனாருக்கு வறுமை வந்து திடீர்த் தாக்குதல் செய்யுமாயின் அடியார் பூசை பண்ணுதல் பகீரதப் பிரயத்தனம். கணவனார் கொள்கைக்காக எதையும் தாங்கும் இதயம் கொண்டாலும் மனைவியாருக்குச் சுவர்க்கம் நரகமாகியது போலாகும் அன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்று உலகத்தைக் கரைத்துக் குடித்த ஔவையார் அனுபவம் பேசுகின்றது. வாழ்க்கையில் பள்ளந்திட்டி. பண்புடையாளனைத் தேடி வரும். மேடு பள்ளத்தில் விழுந்து எழும்பாமல் உள்ளம் உறுதி விளாமல் நின்றால் நின்றது தான். அது சமய வாழ்வின் சாதனை. சோதனையில் சித்தி எய்தியது போலாகும். பின்னாளில் முத்திப்பழம் தித்திக்கும்-சித்திக்கும் சோதனை வரும் போதில் வேதனைக்கு அடி பணிந்தால் சமய வாழ்வு சமயத்துக்கு ஏற்ற வாழ்வாக மாறிவிடும்.

மாறனார் தமது நியமமான அடியார் பூசையை ஆற்ற விடாது மிடி வந்து மிரட்டிய போதிலும் அதற்கு அடி பணியாமல் படியில் ஆற்றி வந்தார்.

அடியார் பூசைக்குப் பொருள் வேண்டும். பொருள் வாங்குவதற்குப் பொருள் வேண்டும்.

மாறர் வீட்டிலுள்ள விற்கும் பொருட்களை விற்றார், பண்ட மாற்றக் கூடியவையை பண்ட மாற்றுப் பண்ணினார். காணி, பூமி, நில புலன்களை ஒற்றி வைத்தார். விற்கத் தக்கவற்றை விற்றார். கை மாற்றுக் கடன் மாறினார். அடியாரை அமுது செய்விப்பதில் உறைப்புடைய உறுதியரானார் மாறர். போர்க்களத்தில், "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்பார்· கல்வியிற் பெரியவரான கம்பர். அடியார் பூசைக் களத்தில் படாத கடன்கள் எல்லாம் பட்டும் மனங்கலங்கினார் அல்லர் இளையான் குடிப்பதி மாறனார்.

கடன்பட்டும் கலங்காத மாறருடைய இந்த நிலைமையில் தான் மலைமகள் மணாளருக்கு நேசம் மிக்க அன்பர் இரவோடிரவாகப் பசி மீதூரம் பெற்று ஆதருவுமின்றி மாறனார் மனைக்கு வந்தார்.

அது கார் காலம். அன்று பகல் மழை. இரவு மழை. அடை மழை. வானம் சோனாவாரியாக மழையைப் பொழிந்து தள்ளியது. போதாக் குறைக்கு எங்கும் ஆளை ஆள் தெரியாத பேரிருள். அன்றைய நாள் பகலும் இரவும் மாறனாருக்கும் மனைவியாருக்கும் உணவு ஒன்றும் இல்லை. பசிப்பிணி நலிவதனால் நள்ளிரவிலும் இருவரும் துயிலாது விழித்திருந்தார்கள்.

மாறனார் ஓர் ஆதரவுமில்லாமல் இல்லத்தை அடைந்த பின்பு தான் சிவனடியார் பசிக்கு ஆற்றாமல் மழையில் நனைந்து வந்து மனையில் புகுந்தார். மாறனார் மனைக்கு வந்த சீரடியாரின் ஈரத்தை மாற்றினார். இருப்பதற்கு இடங்கொடுத்தார். மாறனார் விருந்தினரின் பசியை நினைந்தார். தம் பசியை மறந்தார். அடியாரை அமுதூட்டும் ஆசை பொங்க அம்மையாரிடத்தை அடைந்து ஆலோசனையில் ஈடுபட்டார் மாறனார்.

கணவருடைய மனப்பக்குவத்தை மனம் பரிவு செய்தார் மனைவியார். பின்னர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:

"நான் ஒரு வழியும் காணேன். அயலார் எவரும் இனித் தருவார் ஒருவரில்லை. காலமுங் கழிந்து நள்ளிரவாகியது. வேண்டிய கடன் எல்லாம் வாங்கிவிட்டோம். இனிக் கடன் கேட்க இடமுமில்லை. தீவினையேன் இனிச் செய்யத் தக்க செயல் தான் யாதோ...!" என்று மாறனார் முகத்தைப் பார்த்து மனங்கலங்கிச் சொன்னார் மனைவியார். சற்று நேரம் அங்கு அமைதி நிலவியது.

பின்னர் முகத்தில் கவலைக் குறி தோற்ற மனைவியார் பேசத் தொடங்கினார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமது வறுமைத் துன்பம் நீங்கப் பகல் வயலில் நெல் முளையை விதைத்தீர்கள். இப்போது வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும் விதை முதலைக் கூடையில் வாரிக் கொண்டு வாருங்கள். அதை வல்லவாறு அமுது ஆக்கலும் ஆகும். இந்த வேளையில் இதுவன்றி வழி வேறொன்று அறியேன்.." என்று மிக வருந்தி வாய் விண்டார் மனைவியார்.

மாறனார் மனைவியார் மொழியைக் கேட்டு மனமகிழ்ந்தார். தேடி வைத்த செல்வம் தேவைக்குப் பெற்றவர் போலப் பெரிதுவந்தார் பெரியவர்.

மாறர் உடனே ஒரு பெரிய கூடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வயலுக்குச் சென்றார். வயலில் மழை நீரில் மிதந்து ஒரு வழிச் சார்ந்தது நென்வெண்முளை. கையினால் சேர்த்து வாரி எடுத்தார். கூடையை நிறைத்துக் கொண்டதும் தலையில் சுமந்தார். மாறனார் விரைந்து மனைக்கு மீண்டு வந்தார்.

மனைவியார், மிடைந்த இருளிலும் கொட்டும் மழையிலும் வயலுக்குச் சென்ற கணவர் வரவை வழிபார்த்து வாய்தலில் நின்றார். கணவனாரிடத்தில் நெல்லை வாங்கினார். மிக்க விருப்புடையவராக நென் முளையை நீரில் இட்டார். சேற்றைக் கழுவி எடுத்தார். மனைவியார் கணவரைப் பார்த்துச் சொன்னார்:

"நெருப்பு மூட்டுவதற்கு விறகு ஒன்றும் இல்லை" என்றார். மேலானவர் மேற்கொண்டு ஒன்று சொன்னார் இல்லை. மிக விரைவாக முடிவில்லாத புகழ் பூத்த இல்லத்தின் நீண்ட நாள் இல்லக் கூரையின் அலக்குகளை வரிச்சுக்களை அடுப்பெரிக்க அறுத்து வீழ்த்தினார்.

மனைவியார் அலக்குளை முறித்தார். அடுப்பில் மாட்டினார். நெருப்பை மூட்டினார் வெப்பத்தில் நென் முளையைப் பதமாக வறுத்து எடுத்தார். பின்னர் மனைவியார் குற்றி அரிசியாக்கினார் சுத்தம் பண்ணிய அரிசியை நீர் உலைப் பெய்தார். விரும்பும் இனிய அன்ன அமுது ஆக்கினார்.

சிறந்த கற்பின் திறத்தில் மேம்பட்ட மனைவியார்,

"கறி வகைகளுக்கு இனி என்ன செய்வோம்?" என்று கேட்டவராகிக் கணவனாரை வணங்கினார்.

மாறனார், கறிக்கானவற்றைப் பறித்து வர மீண்டும் வயல் வரப்பிடை விரைந்து சென்றார். இலைக்கறிக்கான பயிர்களைக் கையினால் துழாவி வேரோடு பிடுங்கினார். மாறனார் கொண்டு வந்த கீரை வகைகளை மனைவியார் கையிற் கொடுத்தார்.

தார மாதரார் கீரை வகைகளில் புழுக்கடி, சுருள், பழுப்பு ஆகியவற்றைப் பார்த்துத் தவிர்க்க வேண்டிவற்றைத் தவிர்த்தார். நல்லனவற்றை ஆய்ந்து எடுத்துக் கொண்டார். தெரிந்தெடுத்த இலைகளை நல்ல நீரில் கழுவிச் சுத்தப்படுத்தினார். எல்லாவற்றையும் தக்க புனித பாத்திரத்தில் சேகரித்தார். தமது கைப் பழக்கத்தால் ஒருவகைக் கீரையில் குழம்பு, சுண்டல், பச்சடி, பிரட்டல், புளிக்கறி என்று இன்னோரன்ன வெவ்வேறாகப் பல கறிகளாகப் பாகம் பண்ணிப் பக்குவப்படுத்தினார்.

மாறர் மனைவியார் அன்று குபேர சம்பத்தில் குலவிய நாளில் இந்த இலைகளில் கறி சமைத்திருப்பாரா? அள்ளிக் குப்பையில் கொட்டி இருப்பார். மாறனாரும் அவைகளை ஏன் தான் எடுத்து வரப்போகிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை வந்துற்ற போது வருந்தாலும் செல்வம் சேர்ந்த போது சிரிக்காமலும் வாழும் வழக்கம் பெண்களிடத்தில் வந்து வாய்க்கப் பெற்றால் அதுவே ஒரு வரப்பிரசாதம் அன்றோ!!

மனைவியார் அதே கீரைகளை இன்று சுவை மிக்க பல கறிகளாகச் சமையல் செய்ததையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தார்:

அன்று நாலு விதத்தில், ஆறு சுவைத் திறத்தில் அமுது ஆக்கிச் சிவனடியார்கள் இச்சைப்படி அமுது பரிமாறியதையும் ஒரு கணம் பின்னோக்கிப் பார்த்தார். கண்கள் நீர் முத்துக்களைச் சிந்தினர். மூக்கினை முந்தானைச் சேலையில் சீறிக் கொண்டார். அடிவயிற்றிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு மேலெழுந்தது. அப்பெரு மூச்சை இப்போது உள்ள நிலையில் இவ்வாறாகவாவது அடியார்க்கு அமுது ஆக்கப் பெற்றோமே என்ற மனநிறைவு தரித்துக் கொண்டது.

தாரமாதராரின் தாழ்விலாத் தகவுடைப் பண்பைப் பெரிய புராணம் பேணும் திறன் இது:

**"மனைவியார் கொழுநர் தந்த**
**மனமகிழ் கறிக ளாய்ந்து**
**புனலிடைக் கழுவித் தக்க**
**புனிதபாத் திரத்துக் கைம்மை**
**வினையினால் வேறு வேறு**
**கறியமு தாக்கிப் பண்டை**
**நினைவினாற் குறையை நேர்ந்து**
**திருவமு தமைத்து நின்று"**

மாறனாரை மனைவியார் அழைத்தார். தமது கைவண்ணத்தால் அமைத்த அன்ன அமுது கறி அமுது ஆனவற்றை எல்லாம் காட்டினார். அடியார் பூசைக்கு அவை ஏற்குமாறு அமைந்திருப்பதை மாறனார் பார்த்து, மனம் மகிழ்ந்தார். ஆறனார் சடை அடியாரை அமுதூட்ட அக மகிழ்ந்தார்.

மாறனார் அன்றைய நாளில் அடியாரைக் கண்ட மாத்திரத்தில்,

**"கொண்டு வந்து மனைப்பு குந்து**
**குலாவு பாதம்வி ளக்கியே**
**மண்டு காதலின் ஆத னத்திடை**
**வைத்த ருச்சனை செய்தபின்**
**உண்டி நாலு விதத்தி லாறு**
**சுவைத்தி றத்தன வொப்பிலா**
**அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி**
**னமுது செய்ய வளித்துளார்"**

இன்றைய நாளிலும் நிறைந்த அன்போடு அடியாரை அமுதூட்ட ஆயத்தமானார்.

**சைவத்திரு. சிவ.சண்முகவடிவேல் எழுதும்**
**"தபோபலம்"**
**என்னும் நாடகம் அடுத்த இதழில் தொடராக வெளிவரும்**
**என்பதை அருள்ஒளி வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன்**
**அறியத்தருகின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மைதூழி

## 72. மங்களம் சுப மங்களம்

வேடர்கள் சோலையைச் சூழ்ந்தார்கள். "நம் குலக்கொடியைக் கவர்ந்தவன் நம்மைக் கண்டு ஓடவுமில்லை, அஞ்சவுமில்லை. அடியுங்கள், பிடியுங்கள்" என்று பாண மழைகளை நம்பிராசன் பொழிந்தான். அக்கணைகள் கந்தவேளின் கருணையினால் பூமலர்களாக வீழ்ந்தன. குமரனது சேவல் கொக்கரித்துக் கூவியதுதான் தாமதம் நம்பிராசனும் வேடர்களும் மாய்ந்தனர்.

பிரணவ நாதம் பிறந்தால் புலன்கள் ஓயத்தானே வேண்டும்.

தந்தையும் உடன் பிறந்தோரும் மாண்டதைக் கண்ட வள்ளிப்பிராட்டியார் மனம் பதைபதைத்து வருந்தினார். அம்மையாரின் அன்பினைச் சோதிக்க முருகப்பெருமான் மறைந்தார். அதனால் சோலையை விட்டு ஐயன் நீங்கிச் சென்றார். அம்மையாரும் சுவாமியின் பின்னே நடந்தார். அப்போது, நம்பிராசன் செய்த பாவத்தால் நாரதர் வழியில் குறுக்கிட்டார். "சுவாமி! பெற்ற பிதாவையும் பிறரையும் வதைத்தீர்கள். இதனால் அம்மைக்கும் மிகுந்த கவலை உண்டல்லவா" எனக்கூறினார். சுவாமி மீண்டும் சோலைக்குச் சென்றார். இறந்த தந்தையையும் சுற்றத்தவர்களையும் எழுப்பும்படி அம்மையிடம் அருள் புரிந்தார். அம்மையார் தந்தை முதலாக எல்லார்க்கும் அருள் நோக்கம் செய்தார். என்ன ஆச்சரியம் நித்திரையில் இருந்து எழும்புவது போல எழுந்தார்கள்.

உயிர்த்தெழுந்த நம்பிராசன் முதலானோர்க்கு ஆறுமுகம் பன்னிரு கை கொண்டு திருக்காட்சி அளித்தார். நம்பிராசன் இருகை கூப்பி உச்சிமீது வைத்து வணங்கினான். பூமலர் சொரிந்தான். தேவதேவ எங்கள் சேரியைக் காக்கும் நீரே எமது குலக்கொடியைக் களவு செய்தால், தீராத பழி எமக்கு ஏற்படும். அதனால் தேவரீர் எமது சிற்றூருக்கு வரவேண்டும். அக்கினி சாட்சியாக முறைப்படி எம் புதல்வியை மணந்து கொண்டு தங்கள் பதிக்கு அழைத்துச் செல்ல வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தான்.

நம்பிராசனின் வேண்டுகோளுக்கிரங்கி வள்ளிநாயகி நாரதருடன் சிற்றூருக்கு வேலவன் சென்றார். நம்பி தனது சிறுகுடிலில் புயிற்தோலில் எம்பிரானைப் பிராட்டியுடன் எழுந்தருளச் செய்தான். வேடர்குல மக்கள் எல்லாம் பேரானந்தம் கொண்டனர்.

நல்ல சுபமுகூர்த்த நேரத்தில் ஆகம விதிப்படி வேட்டுவ மன்னன் வள்ளிப்பிராட்டியாரின் திருக்கரத்தை மயிலேறும் முருகன் திருக்கரத்தில் வைத்து "எமது தவப் புதல்வியை உங்களுக்குத் திருமணம் செய்து தந்தேன் ஏற்றுக்கொண்டு அருள்புரிவீர்" என்று தண்ணீர்த் தாரை வார்த்தான். எம்பெருமானும் திருவருட் பூரிப்பால் ஏற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலமுண்ட நீலகண்டப்பெருமான் முதலாக பிரமன் திருமால், தேவர்கோமகன் முதலிய கணங்கள் சூழ உமாதேவியாருடன் வந்தருளி விண்ணில் நின்று வள்ளிநாயகியை கந்தவேள் மணந்த திருமணக் காட்சியைக் கண்டருளினார். திருமாலாதியோர் பூமழை சொரிந்தனர். ஆறுமுகக் கடவுள் பிராட்டியுடன் அம்மை அப்பரை வணங்கி ஆசிபெற்றனர்.

முருகப்பெருமான் மருமகனாக வாய்க்கப் பெற்றமையால் நம்பி பெரிது மகிழ்ந்தான். தேனும் தினைமாவும், பழங்களும் படைத்து, தாங்களும் தேவியும் திருவமுது செய்தருள வேண்டுமெனப் பிரார்த்தனை செய்தான். பெருமானும் அவற்றையுண்டு அருள் புரிந்தார். பின்னர் நம்பிராசனிடம் விடைபெற்றுக் கொண்டு சுவாமியும் வள்ளியம்மையும் திருத்தணிகை தேவர் சூழ வந்தருளினார். முன்னரே தேவதச்சனால் திருக்கோயில் அமைக்கப்பட்டது. உலகமுய்யுமாறு அம்மையாருடன் கந்தவேள் எழுந்தருளினார். வள்ளியம்மை வேடர்குலத்தில் வளர்ந்தமையால் எளியவள். முருகப்பெருமான் கொடை வள்ளல். வள்ளியம்மையின் ஈடிணையில்லாத அன்பிற்கு முருகப்பெருமான் பணிந்து மணந்தது வேடர்குலத்தவர்க்குப் பெருமை அளித்தது. இதனால் முருகப்பெருமான் அன்பெனும் பிடிக்குள் அகப்பட்ட மலையாகின்றார். இதனால் ஒன்று நாம் உணருகின்றோம். ஆன்மாக்களின் தூய அன்பிற்கு இறைவன் அகப்பட்டு அருள் சொரிவது உண்மையாகும்.

திருத்தணிகை மலையில் சுவாமியும் வள்ளி அம்மையும் வீற்றிருந்தனர். அப்போது வள்ளிநாயகி எம்பெருமானை நோக்கிச் "சுவாமி அருட்பெருங்குன்றே! இம்மலையின் சிறப்புக்களை எனக்குக் கூறியருள வேண்டும்" என அன்புடன் கேட்டாள். அப்போது சுவாமி அம்மையாரைப் பார்த்து "வள்ளி நாயகியே சூராதியசுரர்களுடனும், வேட்டுவரோடும் செய்த போரில் கோபம் தணிந்து நாம் இங்கு வந்தமையால் இம்மலைக்குச் செருத்தணி" என்னும் பெயர் உண்டாயிற்று என்று கூறினார். (செரு-கோபம், தணி-தணிதல்)

மலர்களில் சிறந்தது தாமரை. ஆறுகளில் சிறந்தது கங்கை. பதிகளில் சிறந்தது காஞ்சி. அதே போன்று மலைகளில் சிறந்தது செருத்தணி மலையாகும்.

நாம் எப்போதும் இம்மலையில் புல்லாங்குழல் ஊதுவோம். யாழ் மீட்போம். இவ்வாறு பல திருவிளையாடல்கள் புரிவோம். எனது தந்தைக்குத் திருக்கையிலாயமலை சிறந்தது. எத்தனை மலைகள் எனக்கு இருந்தாலும் இந்தச் செருமலை எனக்கு மிகமிக விருப்பமானது. இந்திரன் எம்மைப் பூசிக்கும் பொருட்டு இம்மலையின் சுனையில் மூன்று நீலோற்பலச் செடிகளை வைத்து வளர்த்தார். அம்மூன்று செடிகள் முறையே காலை, மதியம், மாலையில் ஒவ்வொரு பூ மலரும் இதனால் இம்மலைக்கு நீலகிரியென்றும் பெயருண்டு. அதனால் இந்தச் சுனையில் அன்புடன் நீராடி எம்மை வழிபடுவோர்க்கு இம்மை, மறுமை நலன்கள் கிடைக்கும். இம்மலையில் ஐந்து நாட்கள் தங்கி இருந்து எம்மைத் தரிசித்து நோன்பிருந்தவர்கள் எல்லாப் போகங்களையும் அனுபவித்து முடிவில் முத்தி பெறுவர். பாவங்கள் பல செய்தாலும் நம்பால் அன்பு கொண்டு இம்மலையை வந்து வழிபட்டால் நற்கதி கிடைக்கும் என அருளினார்.

இங்கு ஒரு சிறு தர்மம் செய்தாலும் பலவாக அத்தர்மம் பெருகும். இம்மலையை வலம் வந்தாலும் ஒருபடியில் கால் வைத்தாலும் வினைகளை இந்தத் திருதணிமலை அகற்றும் என அருளிய கந்தவேள், வள்ளியம்மையுடன் திருத்தணிகை மலைச்சாரலில் சில நாள் சிவலிங்கபூசை செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கந்தவேளும் வள்ளியம்மையும் கந்தகிரிக்குச் சென்றனர். அங்கு தேவகுஞ்சரி இவர்களை வரவேற்றார். கந்தவேள் குஞ்சரியம்மையாரின் பிரிவுத்துன்பம் நீங்க ஆசுவாசப்படுத்தினார். வள்ளியம்மை, தெய்வானை அம்மையை வீழ்ந்து வணங்கினார். தேவகுஞ்சரி வள்ளியம்மையைத் தனது சகோதரியென அவளாது மனைவாற்றில் இருந்து அறிந்தார். இருவரும் நாதன் அகமிக மகிழ்ந்தனர்.

தேவியர் இருவரும் இருமருங்கும் வீற்றிருக்க கூவும் சேவல், ஆடும் மயில், வேலும் வேறுள படைகளும் பெருமானின் பணிகளைச் சிவகுருநாதனுக்குச் செய்து கொண்டு இருந்தன. வீரவாகுதேவர் முதலியோர் தத்தம் தொண்டுகளைப் புரிந்தனர். உலகமெல்லாம் எம்பிரானின் திருவருள் நதிபோலப் பெருகிப் பரவியது. -தொடரும்

> வெகு விரைவில் மாதாஜீ எழுதும்
> **"சிவன் அருட் கதைகள்"** தொடர் வெளிவரும்.

## இறை உணர்விற்கும், கலையுலகுக்கும் பெருமை சேர்க்கும் நடராஜர் திருவுருவம்



பொ. சிவப்பிரகாசம் கொழும்புத்துறை

சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களுள் தலைமையும், பெருமையும் உடையது நடராசமூர்த்தம். உடலை இயக்கும் இதயத் துடிப்புப் போல உலக இயக்கத்திற்கும் நடராசப் பெருமானது தாண்டவம் துணைபுரிகின்றது.

நடராசப் பெருமான் இத்திருநடனத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்கிறார். ஆதலால், இந்நடனம் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் எனப்படும். நடராசப்பெருமானின் திருவுருவம் உலக மக்களைக் கவர்ந்ததுபோல வேறெந்த உருவமும் கவர்ந்ததில்லை.

ஆடல்வல்லானின் 108 தாண்டவங்களையும், அவை நிருத்தங்களையும் புராண, நாட்டிய, திருக்கோயில் வரலாறுகளிலும் விரிவாகக் காணமுடியும். சிவபெருமான் இந்த 108 நடன வகைகளையும் ஆடிக் காட்டியுள்ளார்.

அழகின் இருப்பிடமாகவும், அரிய பெரிய கருத்துக்களை விளக்கும் நிலையிலும், கலர்ச்சியின் தோற்றமாகவும் நிறைவான மகிழ்ச்சியின் உருவமாகவும் பண்பாட்டின் உச்ச நிலையாகவும், நாகரிகத்தின் சான்றாகவும் விளங்கும் இத்திருவுரு இதன் தூக்கம் காலூன்றும் விதம், கால்மாறி நடனம் ஆடும் நிலை, எடுப்பான போக்கு, ஒளி வீசும் முகக்கண்கள், சிறப்பான சிற்ப வடிவு, இசை, நாட்டியம் ஒருங்கமைந்த தன்மை, நவீன விஞ்ஞானம், மெய்ஞ்ஞானமும் சங்கமிக்கும் இடமாகத் தோற்றம் தருகிறது நடராசப் பெருவடிவம்.

முன்னொருநாள் இறைவனின் ஆனந்த தாண்டவத்தைத் தரிசிக்க தில்லையில் தேவர்கள், இந்திரன், பிரம்மா, விஷ்ணு, தில்லை மூவாயிரவர், பதஞ்சலி, உபமன்யு, வியாக்கிரபாதர் போன்ற முனிவர்களும் கூடியிருந்தனர். ஆனந்தத் தாண்டவத்தைக் காண அனைத்து நிலையில் நந்தியம் பெருமான் கையில் பிரம்புடன் தோன்றினார்.

இறைவனின் ஆனந்தத் தாண்டவம் காண வந்தவர்களை அவரவர்க்கு ஏற்ற இடத்தில் அமரச் செய்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. பதினைந்து நாழிகை ஆகியும் ஞான சபையிலே ஒளிவடிவான வெளியில் கருணை வடிவான உமாதேவியாருடன் எம்பெருமான் காட்சிதந்தார். அனைவரும் தலைமீது கரங்குவித்து 'சிவசிவ' என்றனர்.

பன்முறுவல் பூத்த திருமுகம் மூன்று கண்கள் கங்கை, பிறை கொன்றை மாலையுடைய சடையும், சங்கக்குண்டலம் திருத்தோடு உடைய செவியும், திருநீலகண்டமும், தமருகம், அபயமும், அக்கினியுடனும், புலித்தோலாடையும், முயலகன் மேல் ஊன்றிய பாதமும், எம்பெருமானின் வலக்கை தமருகத்தை ஒலித்துக்கொண்டு சிவகாமி அம்மையார் காண ஆனந்த நடனம் ஆடினார். இறைவன் கால்களின் வேதம் என்னும் சிலம்பு ஒலித்தது.

இந்த ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்த கண்களுக்கு வேறு காட்சியும் வேண்டுமோ?

நன்றி. ஞானக்கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# இதுவன்றோ மகனின் கடமை

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து. நீங்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகளாக வாழ வேண்டும். பெற்ற தாயையும் பிறந்த நாட்டையும் நேசிக்க வேண்டும். நல்ல பல பணிகள் செய்ய வேண்டும். உங்களைப் போல சிறுபிள்ளையாய் இருக்கும் போதே தொடங்கி தாய்க்கும் தாய் நாட்டிற்கும் நல்ல சேவைகள் செய்து உயர்ந்த மதிப்பைப் பெற்ற ஒருவரைப் பற்றிச் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு கிராமத்தில் நல்ல ஒரு மனிதர் இருந்தார். போதிய வருவாய் கிடைத்தும் தமக்காகவோ தம் குடும்பத்திற்காகவோ அவர் எதையும் சேமித்து வைக்கவில்லை. ஊருக்காக, ஊர் மக்களுக்காக பல உதவிகள் புரிந்தவர் திடீரென ஒரு நாள் காலமாகி விட்டார். அவருடைய மனைவியும் அவரைப் போலவே இரக்க சிந்தை உடையவர். அவர் தமது மகனை சிரமப்பட்டு படிக்க வைத்தார். அந்த மகனும் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரன். வித்தியாசாகர் என்பதே அவருடைய பெயர். இளம் வயதிலேயே கல்வியில் நன்றாக முன்னேறி வேலையும் பெற்றுக் கொண்டார். அவர் தமது முதலாவது சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொண்டதும் கிராமத்திலுள்ள தம் தாயை நினைத்தார். "அம்மா என்னை மிகவும் கஷ்டப்பட்டுப் படிப்பித்தார். அவர் நல்ல சேலை உடுத்தியதையோ நல்ல உணவு உண்டதையோ நான் கண்டதில்லை. ஆகவே இந்தப் பணத்தில் அம்மாவுக்காக இரண்டு சேலைகள் வாங்கிக் கொடுக்க வேண்டும்." இப்படி நினைத்த அவர் வீட்டிற்குப் போகும்போது இரண்டு கைத்தறிச் சேலைகள் வாங்கிக்கொண்டு சென்றார். வீட்டில் இருந்த அவருடைய தாய் அவரைத் தழுவி உச்சிமோந்து அன்புடன் வரவேற்றார். "அம்மா உங்களுக்காக நான் இதனை வாங்கி வந்தேன். பழைய நைந்து போன சேலைகளை இனி நீங்கள் உடுத்த வேண்டாம். இவற்றை அணிந்து கொள்ளுங்கள்" என்று தான் கொண்டு வந்த சேலைகளைத் தாயிடம் கொடுத்தான். அவற்றைப் பெற்றுக்கொண்ட தாயார் கண்களில் நீர் ததும்ப மௌனமாக இருந்தார். "ஏன் அம்மா இந்தப் புடவை உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று மகன் கேட்டார்.. "மகனே! உனது உழைப்பில் வாங்கியிருக்கும் இவை எனக்கு எவ்வளவோ மேலான பரிசு என்று தான் நினைக்கிறேன். ஆனால் இதை விடவும் மேலான பரிசு ஒன்றை உன்னிடம் இருந்து நான் எதிர்பார்க்கிறேன் என்று தாயார் கூறினார்." அம்மா! எனக்காக எவ்வளவோ சிரமப்பட்டவர் நீங்கள். நீங்கள் சொல்வதை நிறைவேற்றுவது தான் எனது மிகச் சிறந்த கடமை.


"தயங்காமல் கேளுங்கள் நான் என்ன செய்ய வேண்டும்?" என்று மகன் கேட்டார். "மகனே! நமக்கு ஓரளவு வசதி இருந்ததால் நீ படித்து நன்றாக வந்து விட்டாய். நமது ஊரில் உள்ள பிள்ளைகள் படித்து முன்னேற இங்கே நல்லதொரு பள்ளிக்கூடம் இல்லை. அதனால் நம்மூரிலுள்ள ஏழைப்பிள்ளைகள் சிறு வயதிலேயே ஆடு மாடு மேய்க்கவும் சிறு சிறு வேலை செய்து உழைக்கவும் போய் விடுகிறார்கள். அதனால் நமது ஊரில் கல்வி முன்னேற்றமே இல்லை. நீ உனது உழைப்பில் நன்றாகச் சேமித்து நம்முடைய ஊரில் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவாயென்றால் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லது. அதுவே என் விருப்பம்" என்றார் தாயார். அடுத்த சில ஆண்டுகளில் வித்தியாசாகர் தமது சொந்த ஊதியத்தைப் பயன்படுத்தி அந்த ஊரிலே ஒரு பாடசாலை அமைத்தார். உரிய வசதிகளோடு தங்கிப் படிப்பிக்க நல்ல சில ஆசிரியர்களையும் அமர்த்தினார். அதன் பின் "அம்மா! இப்போது உங்களுக்குத் திருப்திதானா?" என்று தாயாரைக் கேட்டார். "மகனே! நமது சனங்கள் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் எடுக்க பல மைல்கள் அலைந்து திரிகின்றார்கள் ஊர் நடுவே ஒரு நல்ல கிணறு கட்டி எல்லோரும் தண்ணீர் அள்ள வசதி செய்து கொடுப்பாயா? என்று அந்த அம்மாள் கேட்டார். அடுத்த சில வருடங்களில் மகன் அதையும் நிறைவேற்றினார். "அம்மா! இப்போது திருப்திதானா?" என்று தாயாரைக் கேட்டார். "மகனே! நமது ஊர் சனங்களுக்கு நோய் துன்பம் வந்தால் வைத்திய வசதி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பக்கத்தில் வைத்தியசாலை எதுவும் இல்லை. நெடுந்தூரத்திலுள்ள வைத்தியசாலைக்கு போவதற்கு உடனடியான வண்டி வாகனவசதி இல்லை. நம்மூரில் நல்லதொரு வைத்தியசாலை இருந்தால் நன்றாக இருக்கும் அல்லவா?" என்றார் தாய். சில வருடங்கள் உழைத்துத் தாயாரின் விருப்பப்படி கிராம மக்களுக்குப் போதிய மருத்துவ வசதி கிடைக்கும்படி வைத்தியசாலை ஒன்றையும் கட்டி வைத்தியர்களையும் அங்கேயே குடியமர்த்தினார் மகன். "அம்மா! இனி என்ன செய்ய வேண்டும்?" என்று தாயாரிடம் ஒரு நாள் கேட்டார். "என் அன்பு மகனே! ஆயிரம் பிள்ளைகளை விட ஒரு நல்ல மகனை பெறுவதே சிறந்தது. இப்படியான ஒரு மணிப்பிள்ளையை பெற்றேன் இனி ஒரு குறையில்லை" என்றார் தாய்.

***

# வாழிய ஆனினம்



வாழிய ஆனினம் வழுத்திடு தெய்வமாய்
வாழிய ஆனினம் வளம் நிறை நிதியமாய்
வாழிய ஆனினம் வாழ்வுநேர் அமுதமாய்
வாழிய ஆனினம் வையகம் வாழவே.

ஆவினைப் பிள்ளையாய் அணைத்துக் கொள்ளுவோம்
ஆவினைப் போற்றியே அமைதி காணுவோம்
ஆவினை அணைத்துப்பால் அமுதை உண்ணுவோம்
ஆவினை அணைத்தகத் தழகு காணுவோம்

மங்கல வாழ்வினை மகிழ்வோடேற்பவர்
செங்கமலத்துச் சேய் செல்வி ஆகியே
அங்கிருந் தருட்டிரு ஆவை நோக்குவர்
பொங்கிடும் வாழ்வினிற் புனிதம் பொலியவே

புலவர் கோள்புகழ் புனித ஆதரு
மிகவுயர் பாலினை மேன்மைத் தயிரினை
சுகம்விளை சாணியைச் சலத்தை நெய்யினை
சுகந்தரு மருந்தெனச் சொல்வர் தூயரே

மந்திரமாவதும் மதியைத் தருவதும்
சிந்தனைத் திரளிடைத் தேற்ற மளிப்பதும்
வந்தனைக் குரிதாம் வளமார் நீற்றினைத்
தந்த ஆ சாணத்தா லாமென வாழ்த்துவோம்

பண்டிதர். சி. அப்புத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தல விருட்சம்

திரு. ஆ. கதிரமலைநாதன் அவர்கள்
பண்ணாகம்.

போகிற போக்கினைப் பார்த்தால், கோயிலுக்கு ஒழுங்காகச் சென்று வருவோர் கூட "தல விருட்சம் என்றால் என்ன?" "ஏன் இது கோயிலிற் கட்டாயம் இடம்பெற வேண்டும்?" என்பது போன்ற சந்தேகங்களை எழுப்பலாம் என எதிர்பார்க்கலாம்.

**முச்சிறப்புக்கள்:**

சைவப் பாரம்பரியத்தில் மூர்த்தி - தலம் - தீர்த்தம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படுவதுண்டு. இதனுள் தலம் என்பது கோயிலின் அமைவிடம், கோயில் மூல மூர்த்திக்குரிய வழிபாட்டு மரம் என்பவற்றினையே பிரதானமாகக் குறிக்கின்றது.

**ஆரம்பம்:**

உருவ வழிபாடு ஆரம்பிப்பதற்கு முன்பே மரவழிபாடு ஆரம்பித்து விட்டதனை வரலாற்றுச் சான்றுகளிலிருந்தும், இலக்கியக் குறிப்புக்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**மரவழிபாடு:**

மரவழிபாடும் நன்றியுணர்வு அல்லது அச்ச உணர்வு அடிப்படையிலேயே முதற்கண் தோன்றியிருத்தல் வேண்டும். வழிபடப்பெறும் பெரும்பாலான மரங்கள் (உண்ணத்தக்க) பழம் நல்குவனவாகவும், உடல் நோய் போக்கும் மருத்துவ (குணங்கள் கொண்ட) மரங்களாகவும், பரந்த அளவில் கிளை(கள்) பரப்பி நிழல் தருவனவாகவும் இருந்தன. எனவே நன்மை(கள்) நல்கும். (இம்) மரங்கள் மீது அன்பும், நன்றியுணர்ச்சியும் மேலிட வழிபாடும் உருவாயிற்று.

சில மரங்கள் (உண்ணவே உதவாத) நச்சுப்பழங்களை நல்கின. (இது மட்டுமன்றி) நச்சுக் காற்றையே உயிர்த்தன. அவற்றைக் கண்டு அஞ்சிய பண்டைய மாந்தரினம் (இத்துடன் நிறுத்தி) மேலும் தமக்கு அவற்றாற் துன்பம் வரலாகாதென்றும் எண்ணி (மன்றாடி) வணங்கி, அஞ்சி ஒதுக்கியது. எனவே சில இடங்களில் நச்சு மர வழிபாடும் தோன்றியது.

**தல விருட்சம்:**

இம் மர வழிபாடே பலவகையிலும் விரிவு பெற்று "தல விருட்சம்" என்ற தனித்துவத்தினை அதற்குப் பெற்றுக் கொடுத்தது என்று சொல்ல முடியும்.

பண்டை நாட்களில் ஆகம சாஸ்திர முறையில் கட்டப்பட்ட கோயில்கள் எல்லாம் இன்று நாம் வெற்று நிலத்தில் கட்டுகின்ற கோயில்களைப் போன்று கட்டப் பட்டவையல்ல. இடத்தின் விசேஷம், தீர்த்தத்தின் விசேஷம், ஏதேனும் ஒரு அற்புதம் நிகழ்ந்த இடம், எவரேனும் சித்தி பெற்ற - இறையருள் பெற்ற இடம், எவருக்கேனும் இறைவன் காட்சி தந்த இடம், தேவர்-முனிவர்-மகரிஷி போன்றோர் தவஞ்செய்த இடம் முதலிய சிறப்புக்கள் பெற்ற இடங்களிலே தான் கோயில்கள் எழுப்பப்பட்டன.

அந்நாளில் சந்நியாசிகள் மரங்களின் அடியிலிருந்து தான் தியானம் செய்தனர்; தவம் புரிந்தனர். எந்தெந்த மரங்களின் அடியிலிருந்து தவத்தினை மேற்கொண்டால் என்னென்ன பயன்கள் சித்திக்கும், எந்தெந்த மரங்களின் அடியிலிருந்து என்னென்ன மந்திரங்களை உச்சரிக்க வேண்டும், எந்தெந்த மரங்களின் அடியிலிருந்து எவ்வெத் தேவர்களைத் தியானிக்க வேண்டும் என்றெல்லாம் நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தந்த முறைகளில் எவ்வெத் தலங்களில் யார் யார் எவ்வெவ் மரத்தின் கீழிருந்து தியானம் செய்து சித்தி பெற்றார்களோ, அவ்வத்தலங்களில் உள்ள அவ்வவ் மரங்களெல்லாம் தலமரங்களாகப் போற்றப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன.

### ஒன்றுக்கு மேல்:

ஒரு கோயிலுக்குரியதாக ஒரு தலவிருட்சமே சொல்லப்படுவது வழமை. ஆயின் தமிழ் நாட்டிலுள்ள சில கோயில்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலவிருட்சங்கள் குறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக திருத்தெளிச்சேரி என்ற திருத்தலத்திற்கு வில்வம், வன்னி என இரு தலவிருட்சங்கள் சொல்லப்படுகின்றன. இது போன்றே திருக்காறாயில் என்ற திருத்தலத்திற்கு பலா, அகில் ஆகிய இரண்டும் தலவிருட்சங்களாக காணப்படுகின்றன. இவ்வாறே திருப்புனவாயில் என்ற திருத்தலத்திற்கு புன்னை, குருந்து, சதுரக்கள்ளி ஆகிய நான்குமே தலவிருட்சங்களாகக் கொள்ளப்படுவது வியப்பைத் தருவதாய் உள்ளது.

### விதி விலக்குகள்:

ஒவ்வொரு கடவுளுக்கும் சிறப்பித்துச் சொல்லப்படும் மரத்தினை தவிர்த்து பதிலாக மற்றொரு கடவுளுக்குரியதாகக் கொள்ளப்படும் மரம் ஒன்று தல விருட்சமாக அமைந்துள்ளமையும் தெரிந்து கொள்ள வேண்டியதே. தமிழ் நாட்டில் சிவன் எழுந்தருளியிருக்கும் வைத்தீஸ்வரன் கோயிலின் தலவிருட்சமாக அம்பாளுக்குரிய வேம்பு அமைந்திருக்கின்றது. அது போன்றே அம்பாள் எழுந்தருளியிருக்கும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் தல விருட்சமாக முருகனுக்குரிய கடம்பமரம் கொள்ளப்படுகின்றது. இவ்வாறே திருமால் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கம் கோயிலின் தலவிருட்சமாக சிவனுக்குரிய வில்வம் பெருமைப்படுத்தப்படுகின்றது.

### அமைவிடம்:

பெரும்பாலும் தல விருட்சமானது கோயிலின் கருவறையின் பின்புறத்தில் வளர்ந்து நிழல் பரப்பி நிற்பதனை அவதானிக்க முடியும். சில வேளைகளில் இது கோயிலின் அயலில் வளர்ந்திருக்கும்; சில வேளைகளில் இது கோயிலின் உட்பிரகாரத்தில் அமைந்திருக்கும்; சில வேளைகளில் இது கோயிலின் நந்தவனத்தில் வளர்ந்திருக்கும்.

இப்போது தல விருட்சங்களாக இருப்பவை எல்லாம் பெரும்பாலும் 100 வருடங்களுக்கு உட்பட்ட வயதினைக் கொண்டவை ஆகும். இது மட்டுமன்றி மிகக் கூடுதலானவை ஆகக் குறைந்த வயதினைக் கொண்டவை. இதில் வருந்தத்தக்க விடயம் என்னவெனில் சில கோயில்களின் தல விருட்சம் பற்றி எவ்வித தகவல்களையும் பெற்றுக்கொள்ள இயலாதுள்ளமையுமேயாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் பெண்களால் இயங்குகிறது

**திருமதி திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்**
றோத்யோத்-கனடா

உலகம் என்ற சொல்லை முன்னடு செய்து இலக்கியம் கண்ட மொழி தமிழ். பெற்றவளை, நாம் நடமாடும் மண்ணை, கங்கையை, பேசும்மொழியைத் தாய்மையாக்கிய மொழியும் இதுவே. பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தவே. என்ற பாரதி தாய்த்திரு நாடு, தந்தையர் நாடு எனவும் பாடிப் போனான். பெண்மையொரு பண்பாட்டுக் குறியீடு. பெண் நடமாடும் தெய்வம். பெண்ணின்றி ஆணில்லை. ஆணின்றிப் பெண்ணில்லை. பெண்மை தாய்மையின் மூலமூர்த்தி சக்தியின்றிச் சிவம் இல்லை. சக்தி மின்னியல் சிவம் வெளிச்சம். தாயின்றிச் சேயில்லை இவர் தான் நின் தந்தை என இனம் காட்டியவள் பால்நனைந்தூட்டிய தாய். தாயோடு சென்று தலைவனைக் கூடுதல் தெய்வீகம், அது நமக்கு உய்வீகம் அளிக்கும். திருக்குறள் முதற் பாடலிலே ஆதிபகவன் முதற்றே உலகு என வருகிறது. இதை வான்மறையென்றான் ஒருவன்னப்புலகவன். கம்பநாடனும் உலகம் யாவையும் என ஆரம்பிக்கிறான். உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன் என்பர் சேக்கிழார். முருகபக்த நக்கீரரோ "உலகம் உவப்பவல நேர்புதிரிதருபலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு" என திருமுருகாற்றுப்படை பாடியுள்ளார். உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு இப்பூப்பந்தே நாம் வாழும் உலகம். நல்லார் ஒருவர் உளரேல் எல்லார்க்கும் பெய்யும் மழை. உலக சேமமே நம் சேமம். சங்கச் சான்றோர் உண்டால் அம்ம இவ்வுலகம் என ஆரம்பித்து தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் உண்மையான் உண்டிவ்வுலகெனப் பூர்த்தி செய்துள்ளார். கண்ணோட்டத் தைக் காரிகையாக்கி கண்ணோட்டம் உண்மையான் உண்டிவ்வுலகு என்றார். உலகம் நிலைபேறடையக் கண்ணோட்டம் இன்றியமையாதது அன்றோ! கண்ணோட்டம் - கடாட்சம், கடைக்கண்பார்வை, கண்குறிப்பு, நாகரிகம், பட்சம், மரியாதை இரக்கம் எனினுமாம்.

இப்பெண், ஆண் அமைப்பே இயற்கை நியதி.பூவைப் பிஞ்சாக்க இது தேவை. ஓரறிவில் இருந்து, ஆறறிவு வரை இவ்வமைப்புண்டு. சந்ததி வளர ஆண் பெண் உறவு அத்தியாவசியம்.ஆக மானிடத்தாய் மனித மேம்பாட்டின், உச்சம், உயர்வு, உன்னதம் எனலாம். தாய் பெண். பெண் வடிவிலே நடமாடும் அத்தனை உறவு முறையார் யாவருமே பெண்கள். பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின். கற்புக்கு இன்னொரு பெயர் நிறை, நிறை நெஞ்சைக்கற்பு நெறியில் வைத்திருத்தல் பெண்ணுக்கு மட்டும்மன்றி அஃது ஆண்களுக்கும் பொது என்றவன் பாரதி. ஆக பெண்மையெல்லாமே பெருமைக்குரியவர்.

**தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?**
**தாய் பெண்ணே யல்வனோ? தமக்கை தங்கை**
**வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?**
**மனைவியொருத் தியையடிமைப்படுத்த வேண்டித்**
**தாய்க்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ?**
**தாயைப்போ லேபிள்ளை என்று முன்னோர்**
**வாக்குளதன் றோ? பெண்மை அடிமை யுற்றால்**
**மக்களெலாம் அடிமையுறவ்வீயப் பொன்றாமோ?**

பாரதி சுயசரிதை 47

பெண்களுக்கு மடம், அச்சம், நாணம், பயிர்ப்பு இயற்கை அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி ஆண்களுக்கு இலட்சணம் பிறர்மனை நயவாப் பேராண்மை ஆணின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சணம். நம்மோடு குழைந்து எமக்கு வாழ்வளிக்கும் அம்மா, சின்னம்மா, பெரியம்மா, மாமி, மச்சாள், அக்கா, தங்கச்சி இப்படியொரு கூட்டமே எம்மை வளர்த்தெடுத்த பாச உறவுகள் எல்லாமே பெண்ணினம் தானே. இராமன் வனவாசம் செய்யச் சென்றான். தசரதன் இராமனைப் பிரிந்து வருந்தினான் மனமிரங்கிப் புலம்பினான். அவன் புலம்பிய நிலையில் அம்மாவுக்குக் கொடுத்த அழுத்தம் எவ்வளவு மகத்தானது

**அம்மாவென் றுகந்தழைக்கு மார்வச்சொல்**
**கேளாதே அணிசேர் மார்வம்**
**என்மார்வத் திடையழுந்தத் தழுவாதே**
**முழுசாதே மோவா துச்சி**
**கைம்மாவின் நடையன்ன மென்னடையும்**
**கமலம் போல் முகமும் காணாது**
**எம்மானை யென்மகனை யிழந்திட்ட**
**இழிதகையே னிருக் கின்றேனே**

பெருமாள் திருமொழி 9.6

அம்மா என்ற ஆர்வச்சொல் - அவதானத்துக்குரியது. கனதி காத்திரம் உள்ளது. நாம் வீட்டை விட்டு வெளியே சென்றால் எத்தனை விதமான பெண்குலத்தோடு பழகுகிறோம். அன்பு பாராட்டுகிறோம்; அளவளாவுகின்றோம் அயலட்டையைக் காண்கிறோம் அத்தனை பேரில் ஆண்களிலும் பெண்களே கூட ஆண்களும்; பெண்களும் வாய்விட்டுப் பேசி, அன்பு பாராட்டி, இன்னல்கள் இடும்பைகள் பற்றி கலந்துரையாடி மனப்புண்ணை, சிக்கலை, சந்தேகங்களை விடுவித்து ஆறுதலும் தேறுதலும் பெறுகிறோமே. யாராலே பால்யசிநேகிதிகளை நாம் முதிர்ந்தாலும் மறக்க முடிவதில்லை. ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலேயும் ஒரு பெண் இருக்கிறாள் என்ற மேலைநாட்டு உண்மை எவ்வளவு பொருண்மை நிறைந்தது. தாயாக, செவிலியாக, ஆசிரியையாக, காதலியாக, கட்டிய மனைவியாக, அவளின் அன்னையாக, சகோதரிகளாக எத்தனையோ பேர் பின்னணியில் உந்து சக்தியாக அமைகிறார்களன்றோ நல்ல ஆசிரியைகள், பெண்ணதிபர்கள், சமூக சேவையர், வைத்தியசாலையில் கடமையாற்றும் நேர்ஸ் (தாதிகள்) டாக்டர்கள், சிஸ்ரர், மதர்ஸ் எம் மனக்காயங்களுக்கு ஒத்தணம் கொடுத்த பெண் தேவதைகள் அன்றோ.

பெண்ணென்றால், போகப் பொருள்களாகவோ, போதைப் பொருளாகவோ, நலமனுப விக்கும் இணைவிழைச்சாகவோ பாராமல் குடும்பத்தலைவியென்று கண்ணோட்டம் விடும்போது எத்தனை மகத்தான பிறவி பெண்மை. குடும்ப நலம் பேணும் தாதியாக, கடமையாளராக, பொறுப்புணர்வுள்ளவர்களாக, பாதுகாப்பாளராக, தொண்டராக, உணவூட்டும் தாயாகத்,தமராக, கருணை வடிவமாக, பொறுமையின் சின்னமாக, ஏன் கண்கண்ட தெய்வமாக, கணவனை, பிள்ளைகளை இனசனத்தை விருந்தினரைப் பேணி அரவணைத்து சந்தோசப்படுத்தும் பெண் பிறப்பின்றேல் மனைவியின்சேவைக்கு மேல் ஒரு இடம் உலகில் எவர்க்கும் கிடையாது. பெண்ணென்று பிறந்து விட்டால் பீடைகள் இருக்குதெடி எனப் பாரதி பாடினார். இது யதார்த்தம் பொது வாழ்வின் நெளிவு, சுழிவுகளை விட, ஒவ்வொரு குழந்தைப்பேறின் போதும் ஒரு பெண் செத்துப் பிழைக்கிறாள் புனர் ஜென்மம் பெறுகின்றாள்.

சந்ததிக்கழகு வந்தி செய்யாமையென்பது ஔவை வாக்கு. தமிழ் நாட்டிலே குழந்தைகளைப் பெற்றுக் கொடாத மருமகள் பெண்பிள்ளையைப் பெற்ற மருமகள் ஆய்க்கினைக்குட்படுகின்றாள். பெண் பெற்றால் அக்குழந்தையை அழிப்பது உயிர்க்கொலையா? வேறு என்ன ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குபவர்கள் பெண்களே. பெண்களே நாட்டின் கண்கள். யப்பானியப் பெண்கள் குடும்பம் நடத்துவதில் முன்னணியில் நிற்பதால் உலகால் மதிக்கப்படுகின்றார்கள். மாதர் தம்மை இழிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் மடமையைக் கொளுத்துவோம். இல்லறம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தமிழ்ப்பெண்களும் பக்குவமான சமையல் செய்து பகிர்ந்தளிப்பதும் தலையாய கடமையாகும். குழந்தை வளர்ப்பு, நோய் நொடி வராமல் முற்பாதுகாப்பு, நோயின் போது பராமரித்தல், பிள்ளைகளைப் படிக்க வைப்பது, கண்காணிப்பது, பழக்க வழக்கம், ஒழுக்கம், நாகரிகம், உடை, நடை, பாவனை என்பவற்றில் அக்கறை போன்ற பல குடும்ப நலங்களைப் பேணி நல்ல சமுதாயத்தை உருவாக்குவதிற் கண்ணும் கருத்துமாய் பிறர் போற்ற வாழும் பெருந்தகைமை பெண்களுக்கு அணிகலமாகும்.

தன் சமுதாயக் கட்டுக்கோப்பு குலையாமற் சமய, பண்பாட்டுக் கோலங்கள் நழுவாமல் வெகு அக்கறையுடன் கணவனோடு தோளோடு தோள் கொடுத்து உழைப்பதும், தம்பங்களிப்பை நல்குவதும் இவர்களின் பெரும் பணியாம். படியாத பெண்கள் இனி எம் சமுதாயத்தில் இருக்கக் கூடாது. தோட்டம், விவசாயம், வியாபாரம், போன்ற ஊதிபந்தரும் தொழிலைச் சரிநிகர் சமானமாக வேலை செய்ய வேண்டிய காலகட்டம். நேரம் போதாமையை நிறைவு செய்யக் கணவன்மாரும் ஒத்துழைப்பு நல்கிறார்கள். காற்றிலேறியவ்விண்ணையும் சாடுவோம் காதற் பெண்கள் கடைக் கண்பார்வையிலே என்ற பாரதி வாக்கு எமக்கு உற்சாகத்தை, உறுதியை நல்கிறது. அய்யன் வள்ளுவனார் தாயை வைத்து மூன்று குறட்பாக்களிலே நல்ல கருத்தை எடுத்துப் பேசுகின்றார்

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்** குறட்பா 69

தான் பெற்ற மைந்தனை அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த சான்றோன் என்று அறிவுடையார் புகழ்ந்து கூறக்கேட்ட தாய், அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி அடைவாள்.

**ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி**

களி-கள்ளுண்ணல்
மேல்: 923

தன் மகன் ஒரு கட்குடியன், குடிகாரன் என்ற பெயரை வாங்குவதை எந்தத் தாயும் ஏற்றுக்கொள்ளமாட்டாள்.

**அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்** மேல்: 1047

அறத்தோடு தொடர்பில்லாத வறுமையுடையவனைப் பெற்ற தாய் கூட பிறன்போல எண்ணுவாள். (இல்லானை ஈன்றெடுத்த தாய் வேண்டாள்) ஔவை தன் மகன் விடும் தப்புகளைப் பொறுமையுடன் ஏற்கும் பெற்றவள் தன்பிள்ளை உழையாமல் இருந்து ஏழ்மைப்படுவதை விரும்பாள் தாயின் பொறுமை எவ்வளவு உயர்ந்தது.

ஒரு பெண் எந்தக் கோலத்தில் (தாய், மனைவி, சோதரி) நின்றாலும் அவளின் அன்பு, இரக்கம், அமைதி, பொறுமை, இதமான பேச்சு, உபதேசம், என்பன அவளின் பிறப்பம்சம் ஆம் வார்த்தையால் மட்டுமன்றி தன் அன்பாலும் பண்பாலும் நல்வழித்து ணையாய் விளங்குபவள் பெண்தான். பெண்குலத்தின் மலர்ச்சிரிப்பும், கனிவான கதை பேச்சும், தாயன்பும், அழுகையும், நெஞ்சு நிறைந்த கவலையும், எதையும் தாங்கும் இதயமும், கவலை காட்டா இதயமும், புன்சிரிப்பும், அரவணைப்பும், போலிக்கோபமும், விரட்டலும், உறுதியான மனமும், செயற்றிறனும், பாசம், நிறைந்த கொஞ்சலும் போன்ற பிறப்புரிமைகளால் உலகத்தை எப்போதுமே பேணும் உயர் பண்பினால் தன்னைத் தாழ்த்திச் சமுதாயத்தை உயர்த்துபவர்கள் தாய்க்குலத்தினரே எனவே ஒவ்வொரு பெண்களும் உலகம் மெச்சும் மாதர்களாக தம்மை இனம் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கத்தைய, வடஅமெரிக்கப் பெண்கள் இடம் இருந்து பல அம்சங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டியன நிறைய இருக்கின்றன. அவர்கள் கனரக வாகனங்களில் இருந்து கார்வரை ஓட்டக்கற்றுக்கொண்டவர்கள். எதிலும் PERFECTDECI PLENE இருக்கும் சுறுசுறுப்பானவர்கள். நல்ல ஆடையணிந்து ஆளுமை மிக்கவர்களாய் வாழ்கின்றனர். எங்கு பார்த்தாலும் பெண்களே தொழில் பார்ப்பர். ஊக்கம், சுறுசுறுப்பு, முயற்சி, பக்குவம் நிறைந்து காணப்படுவர். ஆண்களுக்குச் சமதையாக அவர்கள் எதிலும் முன்னணியில் நிற்பர்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழ்ப் பெண்கள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு நாட்டுக்கமையத் தம்மை மாற்றி அந்நீரோட்டத்துடன் இணைந்து விட்டனர். அந்தந்த நாட்டு மொழியில் எழுதப் பேசக் கற்றுக்கொண்டனர். ஆனால் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இளம் சந்ததியினர் தமிழை மறந்தே போயினர். ஆங்கிலமே இவர்கள் மொழியாய் மாறிவிட்டது. தாய்மொழியென்பது பயிலப்பட வேண்டியதொன்றல்ல அது இயல்பாகவே பாண்டித்தியம் பெற வேண்டிய மொழி. தாய் மொழி வாய்மொழி அந்தஸ்தைக்கூட இழந்து விட்டமை வருந்தத்தக்கது. சீனப் பெண்களில் சுறுசுறுப்பு முயற்சி, திறமை, விவேகம், தாய்மொழிப்பற்று போற்றற்குரியது நாமும் அவற்றை நமது ஆக்கிக் கொள்ளல் எம்மை உயர்த்தும்.

பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா எனவே பெண்ணினத்தின் பேரும் புகழும் உலகினரால் மதிக்கக் கூடியதாக்குவோம்.

இறைவனின் வடிவமே அர்த்தநாரீஸ்வர வடிவம் தான்
இந்த உலகமுமே அந்த வடிவமேதான்

**இருவர்மடந் தையர்க்கு என்பயன்? இன்புண்டாம்**
**ஒருவன் ஒருத்தி உறின்** திருவருட்பயன் 72

▼▼▼

# திருக்கேதீச்சர திருப்பணி ஆரம்பம்

விஜய வருஷம் தை மாதம் 1894ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து திரு. த.மு.பசுபதி செட்டியாரும் சில மேசன்மாரும் வேறும் சில கூலியாட்களும் திருக்கேதீச்சரம் சென்று வாஸ்துசாந்தி கிராம சாந்தி முதலிய கிரியைகள் செய்து, காடுவெட்டிச் சோதித்த போது அகப்பட்ட கிணறு இறைத்துச் சேறு அள்ளியபிறகு நல்ல தீர்த்தமுடையதாய் இருந்தது. இத்திருக்கேதீச்சரத்தினது அத்திபார ஸ்தானம் ஒருவாறு சோதனையால் அகப்பட்டது. சுற்றுப்பிரதிஷ்டா லிங்கமும் ஒன்று அகப்பட்டது. ஆலயம் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அதிலுள்ள மண்மேட்டை எடுத்தபோது இவ் ஸ்தலத்துத் தென்மேல் புறத் திருமதில்கள் காணப்பட்டன. அம் மதில்கள் அப்பொழுதிருந்த மண்மேட்டில் ஏழு முழத்துக்குக் கீழே அதன்கீழ் நிலமட்டத்திலிருந்து பதினைந்து முழ உயரமுடையனவாகத் தோன்றின. இவை அடியிற் கருங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தன. விஜய வருஷம் தை மாதம் முதல் (1894) ஜய வருஷம் ஆவணி மாதம் வரை பரிசோதனையில் மாத்திரம் எண்ணாயிரத்துச் சொச்ச ரூபாய் செலவாயிற்று. இத்தலத்திலே கொண்ட அன்பு மிகுதியினாலே திரு. பசுபதிச் செட்டியார் தமது ஆன்மார்த்த சிவபூசையிலே இத்தலத்து மூர்த்தியாகிய கௌரிநாயகி அம்பாள்சமேத கேதீச்சர சுவாமியையும் ஆவாகித்துப் பூசித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா ஆண்டில்
# அகில இலங்கை இந்து மாமன்றம்

**திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள்**
பொதுச்செயலாளர்

இலங்கை இந்து மக்களின் உச்ச நிறுவனமாக இந்நாட்டில் உள்ள இந்து மத நிறுவனங்களினதும் கூட்டமைப்பாக ஜய வருடம் தைத்திங்கள் 22ஆம் நாள் (1955 பெப்ரவரி 06) அன்று உதயமான அகில இலங்கை இந்து மாமன்றம் தன் சேவையின் ஐந்து தசாப்தங்களைப் பூர்த்தி செய்து இவ்வருடம் பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

இறை பணி நிற்க-இது மாமன் றத்தின் இலட்சியம். அந்த இலட்சியத்திற் கிணங்க இந்நாட்டில் சமயப் பணிகள் பலவும் மக்கள் துயர் துடைக்கும் மக்கள் சேவையையும் மகேஸ்வரன் பூசையாக ஏற்றி நடத்தப்பட்டு வருகின்றது. அதே சமயம் இந்நாட்டு இந்து மக்களின் குரலாக எங்களின் உடன் பிறப்புக்கள் பல வேத னைகளையும் சோதனைகளையும் எதிர் நோக்கிய வேளையில் அவர்களின் பிரச் சினைகளை உரியவர்களுக்கும் உலகத் திற்கும் எடுத்துச் சொல்லி வந்திருக் கின்றோம்.

இந்நாட்டின் இந்து மக்கள் தமிழ் பேசும் மக்களாக தமிழினத்தைச் சார்ந்தவர் களாக அரசியல் தாக்கங்கள் பலவற்றை எதிர்நோக்கி வந்திருக்கின்றனர். அந்தக் கட்டங்களிலும் அரசியல் சார்பின்றி இவர் களின் சார்பில் குரல் கொடுக்கவும் மாமன்றம் தயங்கவில்லை.

சர்வகட்சி மாநாட்டில் கொழும்பு இந்து பிரஜைகள் குழுவின் அங்கமாக வெளிநாட்டுத் தூதரகங்களுடனான சந்திப் புக்களில் தமிழ் மக்களின் அபிலாசை களைத் திருப்திப்படுத்தும் அரசியற் தீர்வே சமாதானத்திற்கு ஒரு வழியென எடுத்து ரைத்திருக்கிறோம். மாமன்றத்தின் கருத்துக் களையொட்டித் தமிழ்ப் பத்திரிகைகள் தலையங்கங்களும் ஆசிரிய கருத்துரை களும் எழுதியிருக்கின்றன. வெளிநாட்டு ஊடகங்கள் மாமன்றத்தின் அறிக்கை களுக்கும் செய்திகளுக்கும் முக்கியத் துவம் தந்திருக்கின்றன.

மாமன்றத்திற்கு அரசினால் நீண்ட காலக் குத்தகையில் மற்ற மதத்தவர்களுக் கும் கொடுக்கப்பட்டது போல கொழும்பு மாநகரில் கிடைத்த காணியில் தலைமைய கம் அமைப்பது பல காரணங்களுக்காகத் தாமதமானாலும் 1990 ஒக்டோபர் முதல் எடுக்கப்பட்ட தீவிர முயற்சிகளால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து தலைமையகக் கட்டிட வேலைகள் சுமார் ஐந்தரை ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டது.

03-05-1996இல் தலைமையகத்தின் ஐந்தாம் மாடியில் ஸ்ரீ சிவகாமிஅம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந்தருளி மகாகும்பாபிஷேகத்துடன் திருவருள் பாலிக்க ஆரம்பித்தார்.

தலைநகரில் இந்துக்களின் தலை மையகக் கட்டிடம் எழும்பவில்லையே என அங்கலாய்த்துக் கொண்டிருந்த இந்து மக்களுக்கு இந்த நிகழ்வு நிம்மதியைத் தந்தது.

தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நண்பகல் 12-30 மணிக்கு பூசை வழிபாடு நடக்கின்றது. வருடந்தோறும் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு ஆறு அபிடேகங்களும் மற்றும் ஆறுமுக நாவலர் தினம், சுவாமி விபுலானந்தர் தினம், நால்வர் குருபூசைகள் வருடந்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. தைப் பொங்கல் வழிபாடு, சரஸ்வதி பூசை போன்ற வழிபாடுகளும் ஒழுங்காக நடக்கின் றன.

தலைமையகக் கட்டிடம் பூர்த்தி யான 1996ஆம் ஆண்டு முதல் மாமன்றத் தின் காலாண்டிதழான இந்து ஒளி இந்து மக்களுக்கு குறிப்பாக உயர்வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பயன்படும் வகையிலான பல கட்டுரைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய ஆக்கங்களையும் கொண்டதாக ஒழுங்காக வெளியிடப்பட்டு வருகின்றது. ஓர் இந்து சமய ஆராய்ச்சி இதழ் வெளியிடவும் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடவும் ஒழுங்குகள் செய்யப் படுகின்றன. மலையகத்திலும் பின் தங்கிய பல இடங்களிலும் வழிபாட்டுத் தலங்களில் பயிற்சி பெற்ற பூசகர் இல்லாத குறை நிலவுகின்றது. எனினும் பக்தியுடன் பூசை செய்பவர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டு மலர் தொகுப்பு இருந்தால் தமிழில் இறைவனுக்கு புகழ்பாடி அர்ச்சனை செய்லாம் என விடுத்த வேண்டுகோளை அடுத்து சிவ வழிபாட்டு மலர் ஒன்றினை மாமன்றம் வெளியிட்டுள்ளது. இப்பிரசுரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. திருக்கேதீச்சர வரலாறு, சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் எழுதிய சைவத்தின் மகிமை சைவப் பெரியார் ஆ. குணநாயகம் எழுதிய புதுமைக்கும் வழிகாட்டும் சைவசமயம் சமயக் கட்டுரைகளின் தொகுப்பு முதலிய வற்றை மாமன்றம் வெளியிட்டு வைத்திருக் கின்றது.

மாணவர்களுக்கு பயன்படும் வகை யில் பஞ்சபுராணங்களும் அறிவுரைகளும் கொண்ட அப்பியாசப் புத்தகங்களை அச்சிட்டு வசதியற்ற மாணவர்களுக்கு நாடளாவிய ரீதியில் வழங்கி வருகின்றோம். மலையகத்தின் பல பகுதிகளில் அப்பியா சப் புத்தகங்களின் விநியோக நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடற்பாலது.

நாடளாவிய ரீதியில் மாமன்றம் அறநெறிக் கருத்தரங்குகளையும், சமய தீட்சை கொடுக்கும் நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றது. மலையகத்தில் மற்றும் பின் தங்கிய இடங்களிலும் இப்படியான கருத்தரங்குகள் நடத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து இம்முயற்சியை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்து சமய மக்களை மக்கள் பணியில் மேலும் ஈடுபடுத்த வழிவகுக்கும் திட்டங்கள் தீட்டி ஆரம்ப முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பல பகுதிகளில் மாமன்றம் பலவித கருத்தரங்குகளை குறிப்பாக ஜீ.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக இந்து நாகரிகம் பாடத்திற்கான பயிலரங்கு களை நடத்தி வருகின்றது. மாமன்றக் கல்விக்கு குழுவின் முயற்சியாக இந்து நாகரிகத்திற்கான பாடப்புத்தகம் ஒன்றும் விரைவில் வெளியிட மாமன்றம் திட்டமிட் டிருக்கிறது.

காலத்துக்கு காலம் தமிழ் பேசும் ஆசிரியர்கள் மாணவர்கள் தமிழ் பாடசா லைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உரிய இடங்களுக்கு மாமன்றம் எடுத்துக்கூறி வந்திருக்கின்றது.

மாமன்றத்தில் நூலகம் ஒன்றை விருத்தி செய்யவும் திட்டம் தீட்டப்பட்டி ருக்கிறது.

இரத்மலானை கொழும்பு இந்து கல்லூரி விடுதிகளை ஆரம்பித்து சிறப்புற நிர்வகித்து வரும் மாமன்றம் வசதியற்ற பல மாணவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்க ஆண்டவன் அருள் தந்திருக்கின் றான் என்றே கூறவேண்டும்.

லண்டன் ஸ்ரீகனகதுர்க்கையம்மன் ஆலயத்தினரின் நிதி ஆதரவுடன் மன்னாரில் எமது அங்கத்துவ சங்கமான மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்துடன் இணைந்து ஒரு சிறுவர் பாதுகாப்பகத்தைச் சமீபத்தில் நிறுவியுள் ளோம். அதே ஆதரவுடனும் இணைப்புடனும் மன்னாரில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவும் ஒழுங்குகள் செய் திருக்கிறோம்.

மன்னாரில் முருகன் கோவிலை சூழ்ந்து வாழும் இந்து குடும்பங்கள் தங்கள் தொழிலை செய்ய முடியாத நிலை ஏற் பட்டபோது லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய ஆதரவுடன் மாமன்றம் ஒரு இறங்கு துறையை வாங்கி மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் துடன் இணைந்து தேவையான ஒழுங்கு களை செய்திருக்கின் றோம்.

வடகிழக்கில் யுத்தம் காரணமாக சொந்த நாட்டில் மக்கள் அகதிகளாகிய துர்ப்பாக்கிய சூழ்நிலையிலும் மலையகத் திலும், களுத்துறை போன்ற இடங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெள்ளத்தினால் அகதிகளான போதும், சமீபத்தில் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் அம்பாறை (கல்முனை), மட்டக்களப்பு, திருகோணமலை, கிளி நொச்சி, யாழ்ப்பாணம், முதலிய இடங்களில் அல்லலுற்ற அகதிகளுக்கு கொழும்பு மாநகரில் சேர்க்கப்பட்ட மா மன்றம் கொள்வனவு செய்த நிவாரணப் பொருட்களை உடனடியாக அனுப்பி வைத்தோம்.

சில இடங்களில் எமது மாமன்ற அங்கத்தவர்கள் நேரடியாகச் சென்று இக்கடமையில் ஈடுபட்டனர். குடும்பங்கள் அகதி முகாம்களிலிருந்து வீடுகளுக்குத் திரும்பிய போது மனித நேயத்தின் ஆதரவுடன் சமையல் பாத்திரங்கள் வழங்க ஒழுங்கு செய்தோம். மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தகங்களும் வழங்கினோம். பிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டம் ஒன்றையும் அறிவித்திருக்கிறோம்.

மருத்துவ உதவி அவசியம் தேவைப்பட்ட இரு இருதய நோயாளிகளுக்கு உதவியும் பாடசாலை மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் ஒழுங்குகளும் செய்திருக்கின்றோம்.

இந்நாட்டில் இந்து மன்றங்களின் கூட்டமைப்பான எமது மாமன்றத்தின் உறுப்பாண்மை கொண்ட பல இந்து நிறவனங்களும் தங்கள் சொந்தப் பாணியில் நாட்டின் பல பாகங்களிலும் பல பணிகளைச் செய்து வருகின்றன என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

அகில இலங்கை இந்து மாமன்றம் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தி செய்து பொன்விழாக்காணும் சமயத்தில் நாட்டில் இருக்கும் நிலைமை எங்களை எந்த வித விழாக்களையும் எடுக்கும் மனப்பாங்கில் வைக்கவில்லை. அதற்குப் பதிலாக நாங்கள் செய்து வரும் மக்கள் சேவை இன்னும் அவர்களுக்குத் தேவை.

அதுவே நாங்கள் ஆண்டவனுக்குச் செலுத்தும் நன்றிக்கடனாக இருக்கும் என்பதனை உணர்ந்து இன்னும் பல திட்டங்களுடன் எமது மக்கள் பணி தொடர ஆண்டவனருள் வேண்டி நிற்கின்றோம்.

*அகில இலங்கை இந்து மாமன்றப் பொன்விழாவையொட்டி*
*அகில இலங்கை இந்து மாமன்றமும் யாழ்ப்பாணம் தேசிய*
*கல்வியியற் கல்லூரியும் இணைந்து நடத்தும்*

# இந்து மாநாடு

## 15-07-2005 - 17-07-2005

**இலங்கையில் இந்து சமய வரலாறு, பண்பாடு, வழிபாடு, வாழ்வியல், மெய்யியல், விஞ்ஞானம், கலை, கல்வியியல் அடிப்படையில் ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டு ஆராயப்படும்.**

மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் கற்கும் ஆசிரிய மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை மையமாகக் கொண்டு இம்மாநாடு நடத்தப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்களும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கல்விமான்களும், ஆய்வாளர்களும் இம்மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பர்.

**மகாநாடு சிறக்க அருள்ஒளி வாசகர்களோடு நாமும் வாழ்த்துகின்றோம்.**

**- ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக பக்தி

**மஹாராஜஸ்ரீ. சு.து. ஷண்முகநாதக்குருக்கள்**
மாவைஆதீன கர்த்தா பிரதமகுரு.

அரிதான மானுடற் பிறவியெடுத்து, அனுதினமும் அல்லல்களால் அலைக்கப்பட்டு, துன்ப துயரங்களால் வாட்டப்பட்டு,தாபங்களில்தத்தளிக்கும் மனிதர்களை, இவை யாவற்றிலுமிருந்து நீக்குமுகமாகவே ஆலயங்களை எம்முன்னோர் வகுத்து அதன்வழி செயற்பட சங்கல்பித்தனர். பிறவி, பிணி, மூப்பு, மரணம்இதுதான் சம்சாரச் சுழற்சி இவற்றிலிருந்து விடுபட்டு இடைநிலை வாழ்வுகளில் ஏற்படும் விபத்துக்கள், ஆபத்துக் கள், துன்ப துயரங்கள் என்பவற்றை நீக்கி, சம்பத்தையும் சுகங்களையும் ஈர்த்து, அதன்மூலம் இஷ்டகாம்ய சித்திகளைப் பெறவே ஆலயபூசை ஆராதனைகள், உற்சவங்கள் என்பன எழுந்தன. ஞானக்கந்தனது மகத்துவம், மகாத்மியம், கீர்த்தி, அருட்கொடை என்பனவற்றெயெல்லாம் நினைவிலே உணர்ந்துகொண்ட விஸ்வாமித்ர ரிஷிக்கு, முருகப்பெருமான் சரவணப்பொய்கையிலே அவரது நினைவை பிரதியட்சமாக்கி விட்டார். முதன்முதலாகத் தற்செயலாக சரவணப்பொய்கையில் அவதரித்த முருகனது காட்சியைக் கண்ட விஸ்வாமித்திரரது உடல் குளிர்ந்தது, உள்ளமும் தெளிந்தது ஞானக்கண்ணும் திறந்தது. இவ்ரிஷி புத்துணர்ச்சி பெற்று, புது உலக வாழ் திறன்களையும் பெற்று, ஞானமும் முதிர்வு கொண்டு, இக்குழந்தைகளது தரிசனத்தால் உய்வுபெற்று பிரம்மத்தையே உணரும் தன்மையைப் பெற்றார். நாழிகையேறயேற முருக தரிசனத்தால் ரிஷி, இவர்கள் தான் பிரம்பம், இவர்கட்கு ஆற்ற வேண்டிய பூசைகள், கிரியைகள், உற்சவ விதிகள் விரதானுஷ்டானங்கள் எவை எவ்வாறு ஆற்றுவதென்ற புலமைகளும் இறைவனருளால் விஸ்வாமித்திரரது ஞானசக்தியில் ஏறியது. இதனூடுதான் பூமண்டல வாழ்வியல்கள் புனிதம் பெற்று மக்களையும் உயிரினங்களையும் எக்காலமும் சுகசீவிகளாக வாழ்ந்து முத்திபெற முடியுமென ரிஷியும் உணர்ந்தார்.

இதனையே கச்சியப்பசிவாசாரியரும்,

**"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதி பிழம்பதோர் மேனியாகி**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தான் உலகமுய்ய"**

என உலகிற்கு அறியத் தந்துள்ளார். இவ்வவதார மகிமையை சப்த ரிஷிகள் கூட அறிந்து, தரிசித்து, மேன்மை கொண்டனர். இத்தகைய தரிசனங்களால் ஜீவராசிகளும் சகல துறைகளிலும் உத்வேகங்களைக் கொண்டனர்.

சிவப்பிரம்மத்தினின்றே சுப்ரமண்யமும் தோன்றியதை ருத்ரமந்ரம் "யாதே ருத்ர சிவதனு" என உச்சரிக்கிறது. சுப்ரமண்யத்திற்குரிய ஆறெழுத்து மந்திரத்தை கண்டு பிடித்தவர் சனத்துமார ரிஷியாவர். இந்த சுப்பிரமண்யமே பிரம்மம் என்றதனால் வேதமாதா இது பற்றி எதுவுமே கூறாது "சுப்ரமண்யோம்" என மும்முறை கூறியதோடு நிறுத்தியது. இப்பிரம்மம் உடல்களின் கண்ணும், உலகின் கண்ணும் காணப்படும் பகைமைகளை அடியோடு அழிக்குமென்ற காரணத்தால் ருத்ரவேத மந்திரத்தில் "நமோ ஹிரண்ய பாவஹே, ஸேனான்ய பதயே நமோதம" என்ற மந்திரம் இறுக்கம் கொள்கிறது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் கீதையில் படைக்கும் படைக்கலன்களுக்கும் முதல்வனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் ஸ்கந்தனாகவே யானும் மனதில் கொண்டு பிரகாசிக்கின்றேன் என்றார். வால்மீகி இராமயணத்தில் விஸ்வமித்ரர் வாயிலாக கந்தப்பெருமானது அவதாரத்தின் மகிமையை

**"குமார ஸம்பவஸ்சைவ தன்ய புண்யஸ்ததைவச**
**பக்தஸ்ய கார்த்திகேயே காகுஸ்த புவிமானவஹ**
**ஆயுஷ்மான் புத்ர பௌத்ரஸ்ச, ஸகந்த**
**ஸாலோக்யதாம் வீரஜதே"**

என விதந்து கூறியுள்ளார். பாரத இதிகாசத்திலும் ஸ்கந்தனது பெருமைகள் பல இடங்களிலும் உதாரணப்படுத்தப்படுகிறது. பீஷ்மர் தமது படையை முன்னிலைப்படுத்தும் போதும் கூட

**"நமஸ்கிருத்ய குமாரராய ஸேனான்யே சக்திபாணயே**
**அஹம் ஸேனா பதிஸ்தேக்ய பவிஷ்யாமி ந சம்ஸயம்"**

என கந்தனது சேனாபதி தன்மை தனக்கும் வேண்டுமென பிரார்த்தித்தார்.

சிவபிரான் முருகனது அவதாரத்தன்மையை சரவணப் பொய்கையில் வைத்து உமாதேவிக்கும் கூறியபோது,

**"ஆதலின் நமது சக்தி யறுமுகனும் யாமும்**
**பேதக மன்றானம் போற் பிரிவிலன் யாண்டுநின்றான்**
**ஏதமில் குழவீ போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்**
**போதமும மழிவில் வீடும் போற்றினர்கருள வல்லான்"** என்றார்.

முருகக்கடவுளது அவதாரத்தை அறிபவர்களும், அறிந்து உணர்வு கொள்வோரும் எம்பெருமானது திருவருட் செல்வங்களைப் பெற்றுய்வர். இதனாற்றான் ஆறுமுகநாவலர் கூட சைவர்களது இல்லத்தில் கந்தபுராண நூலை வைத்துப் பூசியுங்கள் என இரந்து நின்றார். கந்தபுராண நூலை வீட்டில் வைத்து அதன்மேல் பட்டு விபூதிப்பையில் திருநீறை நிரப்பிப் பூசிப்போருக்கு எதுவித கவலையும் கிட்டாது. கிரகங்களால் ஏற்படும் துன்பங்களும் மறையும். ஆயுள் ஆராக்கியம், ஐஸ்வர்யம் என்பன சேருமென கச்சியப்ப சிவாசார்யர் கூறியது போன்று நவநீத கிருஷ்ண பாரதியாரும் தினமும் மக்களுக்கு இவ்வாற உபதேசித்தார். இப்பட்டுப் பையிலுள்ள விபூதியை தினமும் காலை மாலை வேளைகளில் 'முருகா' என மூன்றுதரம் ஜெபித்து அணிவார்களாயின் மனச்சஞ்சலங்களினின்று இனிதே வாழலாமென கௌசிகமுனிவர் அறியத் தந்துள்ளார்.

கந்தபுராணம், குமாரதந்திரம் அனுசரணைகளோடு ஆக்கமிக்க அருட்கொடைகளை பக்தர்களுக்கு அருளவேண்டுமென சதா கருமமாற்றும் மாவைக்கந்தன் ஆலய பார்த்திப வருஷ உற்சவங்கள் ஆனி மாதம் 27ஆம் நாள் (11-07-2005) ஆரம்பமாகி ஆடி மாதம் 20ஆம் நாள் (04-08-2005) ஆடி அமாவாசையோடு பூர்த்தி பெறுகிறது.

**"அருணதளபத்மம் அனுதினமுமே துதிக்க, அரியதமிழ்**
**தானளித்த மயில்வீரா,**
**அறிவாய் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும்**
**அடியார் இடைஞ்சல் களை வோனே"**

என அடியார் பெருமக்கள் மனமுருகிப்பாடி, நாமும் நாடும் நலம்பெற இவ்வுற்ஸவ காலங்களில் பிரார்த்திப்பது மேன்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பிப்புலவர் "கல்வளை அந்தாதி" பாடிய
கல்வளைப் பிள்ளையார் கோவில் முகப்புத் தோற்றம்





கல்வளைப் பிள்ளையார்
பழைய மூர்த்தி



கல்வளைப் பிள்ளையார்
புதிய மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான
வசந்த மண்டப முகப்புத்தோற்றம்



கதிர்காம கந்தன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..., நல்லூர்.